தென்றல்

வார இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 25 புதிய காசு | வெளிநாடு 30 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, ஆடி 30 (15-8-'59). சனிக்கிழமை | இதழ் 9

இவரைப் பற்றிய

பாடல்

இரண்டாம் பக்கம்

காண்க!

சேரியில் உழலும் புழுக்கள் இங்கே! மாடியில் உலவும் சீமான் அங்கே!

கட்டாந்தரையே, "கனக மணி மாளிகை!" வானமே அதற்கு வாய்த்த நற்கூரை! ஆண்டாண்டுக்கு அது புதுமை கேட்காது! தனது சீரிளமையைச் சிதைய விடாது!

விண் மகள் வடிக்கும் கண்ணீரை, மண் மகள் தாங்கியிருப்பாள்; அதில் தங்கியிருக்கும் அக்கனகமணி மாளிகை! ஆமாம், அதுதான் ஏழையர் தங்கும் தீவு!

அத்தீவு மாளிகையைச் சுற்றியிருக்கும் மழை வெள்ளக் கடலில் அன்றாடம் ஆயிரம் புத்துயிர்கள் பிறக்கும்; வளரும்; செழிக்கும்! அவற்றின் அரவணைப்பிலே இந்நாட்டு மன்னர்கள் அமைதியாய்க் கிடப்பர். கையது கொண்டு மெய்யது பொத்தி, காலது கொண்டு மேலது தழீஇ, சத்திமுற்றப் புலவன் எப்படிக் கிடந்தான்? பார்த்திருக்கமாட்டீர்! இங்கே ஒரு முறைபாரும்; ஆயிரமாயிரம் சத்திமுற்றப் புலவர்களைக் காணலாம்! அன்னார் தாம் இந்நாட்டின் மக்கள்! அவர்களே சேரி வாசிகள்!

சேரி வாசிகள் என்றால் மனிதர்கள் சேர்ந்து வாழ்கின்ற இடம் என்று பொருள்! இல்லை! இல்லை! தென்னகத்தில் ஈ, எறும்பு, கொசு, பூச்சி, அட்டை, மனிதன் முதலிய யாவும் தம்முள் வேறுபாடற்றுச் சேர்ந்து வாழும் இடம்தான் சேரி! ஆகா, எவ்வளவு பொருத்தமான பெயர்? இந்தச் சொல்லைக் கண்டுபிடித்தவன், நீடு வாழ்க! அதிலும் இந்தச் சொல்லுக்கு இலக்காகவிருக்கும் தென்னகமே, நீ, நீடு வாழி! நீடு வாழி! குடியிருப்பதற்கு ஒழுங்கான குடிலுமின்றி, ஓட்டைக் குடிசையிலே ஒண்டிக் கிடக்கும் "ஜீவ ராசிகளே!" நீங்கள் உயிர் உள்ளளவும், உறுபூச்சி பட்டை உள்ளளவும் வாழி! வாழி!

வடக்கே ஏன் விழியைத் திருப்புகின்றீர்! அதுவா? அது ஒருமாளிகையாக்கும்! "காமராசர் குடியிருக்கும் வீடா அது?" என்று கேட்கிறாயா? அவர்கூட, என்னதான் முயன்றாலும் அப்படி ஒரு மாளிகையைக் காண முடியாது? நீ இருப்பதற்கும் இறந்த பின் புதைப்பதற்கும்கூட ஆறடி மண் கிடைக்கவில்லை! ஆனால் அந்த மாளிகையைச் சுற்றி எவ்வளவு பெரிய தோட்டம்! அந்த வீட்டில் தான் எவ்வளவெவ்வளவு வசதிகள்? "பூட்ஸ் மாளிகை" எனப் பெயர் பெற்ற அந்தக் கட்டடத்தில்தான் எத்துணை அறைகள்! மாடி வேறு; அதையடைய அழகான படி வேறு; படியில் நின்றாலே பம்பாய் மாநகரின் பல பகுதிகளையும் கண்டுவிடுவாய்! அங்கு நின்றால்தான் என்ன அருமையான காற்று! சிம்லாவும் முசௌரியும் அந்த இடத்தில் தோற்றுவிடும்! சே, உன் கண்களில் ஏன் ஆசை கொப்பளிக்கிறது? கூடாது! கூடாது! அதை நீ நினைத்தும் பார்க்கக்கூடாது! நீ எங்கே பிறந்தவன் - எப்படிப்பட்டவன் - உன் தலையில் நேருவின் சுதந்தரம் எழுதிய எழுத்தென்ன? இவற்றையெல்லாம் மறந்து விட்டாயா? அடமண்டு! பம்பாயில்தான் இந்த "பூட்ஸ் மாளிகை" போன்ற கேளிக்கை மாளிகையெல்லாம் இருக்கலாம்; அது இன்பத்தின் வாசலாயிற்றே! நீ இருக்க வேண்டியது சேரியில்தான்! இத்துணை நாளும் உன்னோடு இரண்டறக் கலந்து வாழ்ந்த தோழர்களை மறந்து விட்டாயா! அட முட்டாளே! அட அடிமையே! நீ இருப்பது தென்னகத்திலடா! அது இருப்பது பம்பாயிலடா! ஆமடா, நாமெல்லாம் வாழ்வது சுதந்திரத் திருநாடாம், ஏக இந்தியாவிலேயடா!

உனக்கு ஆறடி மண்கூடக் கூடக் கிடைக்கவில்லை - இந்தப் பரந்த மாநிலத்தில். பம்பாயில் உள்ளோர் பளிங்கு மண்டபங்களையும் கேளிக்கை மாளிகைகளையும் கட்டி மகிழ்கின்றனர். ஒன்றல்ல இரண்டல்ல: பல்லாயிரம்! பல்லாயிரம்! மரின்டிரைவிலும் மலபார்க் குன்றிலும் வானத்தைத் தொட்டுக் கொண்டு நிற்பனவே அதற்குச் சான்றுகள்! ஆமாம், தமிழனே! இது தான் சுதந்திர மாளிகையில் நீ பெறும் வாசம். ★

சிங்கத் தமிழன்-சிங்களத் தமிழன் (உள்ளே)

தொல்காப்பியச்சுவை!

௭. மெய்ப்பாடு விளக்கும் உண்மை.

தொல்காப்பியரது விரிந்த அறிவின் விளக்கமே அவர்தரும் தொல்காப்பிய நூலாகும். அறிஞர் தம் சொல்லும் செயலும் ஆக்கத்திற்கும், ஊக்கத்திற்கும் அரணாய் அமைகின்றன. தொல்காப்பியர் தமிழர் தம் வாழ்வியலுக்குச் சில வரைமுறைகளைக் கூறி அரண் கண்டார். அவ்வாறு கூறியவர் மெய்ப்பாட்டியலையும், உவம இயலையும் ஏன் இணைத்துள்ளார்? என்பதைச் சற்றுத் தெளிவாக எண்ணுதல் வேண்டும்.

''மெய்ப்பாடு'' என்பதைத் தனியாகவே கண்டோம். ஆனால் ஏன்? என்பதை இன்று காணலாம். அகத்திணையியலிலும், களவியல் - கற்பியலிலும் தலைவி-தலைவன் உறவு முறைகளைக் கூறியவர் ''மெய்ப்பாட்டு இயலில்'' அந்த உறவு தோன்றிய தன் அடிப்படையை விளக்குகிறார். தலைவி-தலைவனைப் பார்க்கிறாள்-தலைவனும் பார்க்கிறான். தலைவி தலைகுனிகிறாள் - தலைவன் தடுமாறுகிறான். நினைவலைகள் ஓடுகின்றன. நீள்விழியாள் நினைவும் - வாள் வீரன் நினைவும் கைகோர்த்து நிற்கின்றன. பின்னர் இதுவரை எய்தாத புதிய இன்பத்தை அடைய முயல்கின்றனர்.

தலைவன்முன் தலைவி முதலிற் பேசுதல் இல்லை என்பதை முன்னரே கண்டோம். ஆனால் அவனும் தலைவனை விரும்புகிறாள் என்பதை எவ்வாறு அறியமுடியும்? அதற்குத்தான் தொல்காப்பியர் மெய்ப்பாடு கூறுகிறார்.

''நாட்டம் இரண்டும்
அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்குங்
குறிப்புரை யாகும்''
—(தொல். 93)

அவ்வாறு இருவர் உள்ளமும் ஒன்றுபட்டால் மேலே என்ன நடக்கும் என்பதை அடுத்த மெய்ப்பாட்டின்மூலம் உணர்த்துகிறார்.

''குறிப்பே குறித்தது
கொள்ளு மாயின்
ஆங்கவை நிகழும்
என்மனார் புலவர்''
—(தொல் இளம்-94)

எனவே இருவர் கண்களும் ஒருமுகமாகப் பேசாவிட்டால் மேலே இன்பம் இல்லை. ஒன்றுபட்டால் வேட்கை நிகழும்.

பெண்பாலார்க்கு மட்டும் பத்து வகை நிகழ்ச்சிகளைக் கூறுகிறார். இந்நிகழ்ச்சிகளைச் சற்று ஆழ்ந்து சிந்தித்தால் பெண்கள்தம் உள இயல்பை எளிதில் அறியமுடிகின்றது.

முதலாவதாக, 'புகுமுகம்புரிதல்' மூலம் தலைவன் தலைவியைப் பெரிதும் புகழ்ந்து கூறிப் புணரும் குறிப்பை அறிந்து முகத்தினை மாறுபடாது பொருந்துதல் அவ்வழி இன்பம் பெற்றால் முகம் வியர்த்தலும், நெஞ்சின் உள்ளே ஒரு புதிய உணர்வும் ஏற்படுகின்றது. ஆனால் அதனை வெளியே கூறாது சிரித்து மறைக்க முயலுவராம்.

இரண்டாவதாக, தலைவனிடம்தான் காதல் காரணமாகத் தலைவி சில செயல்களைச் செய்ய முற்படுகின்றாள். இச்செயல்களை மேலாக அறியும் தலைவன் - தலைவிக்குப் புணர்ச்சிக் குறிப்பு உள்ளது என்று அறிதல் எளிதாகும். தலைவி தன் தலையைக் கூந்தல் அழகைக் குலைத்து நிற்றல், காதினின்று அணி ஒன்றை வேண்டுமென்றே கழற்றிக் கீழே போட்டுத் தேடுபவள்போல் தலைவனைக் கடைக்கண்மூலம் கண்டு மகிழல். அல்லது கட்டிய உடையை மீண்டும் கலைத்து அழகுறக் கட்ட முயலுதல். இவை நான்கும் காமக் குறியில்லாதாரிடம் இல்லை எனலாம், இவைகளைச் செய்வது எதற்கு? தலைவனைத்தான் காண்பதைப் பிறர் கண்டால் அம்பலாகி, அலராகிவிடுமே என்பதால் வேறு செயல்களைச் செய்பவள்போல் தோற்றமளிக்கிறாள் எனில் உண்மை.

நான்காம் அவத்தையில் சிறப்பாக ஒன்று கூறுகிறார். தலைவன் - தலைவி இருவர்மாட்டே உள்ள உறவு இது. இன்றைய வழக்காறுக்கும் ஒக்கும். தெருவில் செல்வோன் தருவதையெல்லாம் ஒருத்தி வாங்குவதும்

இராம. இராமநாதன்
பி.ஏ. (ஆனர்ஸ்)

இல்லை; அவ்வாறு நடப்பவனைத் தன் பெற்றோர் கொண்டு தண்டிக்கவும் செய்வாள். இது இன்றைய - நேற்றைய - நாளைய நிலையாக உள்ளது.

தொல்காப்பியர் கூறுகிறார்: ஆண்மகன் ஒருவன் ஏதேனும் அரிய பொருளைக் கொண்டுவந்து அல்ல- வெறும் தழையைக் கொண்டுவந்து தன்பால் அன்பு நோக்குச் செலுத்தும் தலைவியிடம் கொடுப்பினும் தலைவி அதனை அன்போடு பெறுவாளாம். விருப்பம் இல்லையெனில் வெறுப் பல்லவா வந்திருக்கும். இன்று கைக்குட்டைகள் (Kerchiefs), நாட்காட்டிகள் (Calenders) முதலியன இந்தப் பொருளாகப்பயன்படுகின்றன. எல்லாவற்றையும்விடப் புகைப்படங்கள் - தத்தம் புகைப்படங்களே (Photos) மாற்றிக்கொள்ளும் பெரும் பொருளாகத் தலைவி - தலைவன் இருவரிடமும் காணப்படுகின்றது.

''பாராட் டெடுத்தல்
மடந்தப வுரைத்தல்
ஈரமில் கூற்றம்
ஏற்றலர் நாணல்
கொடுப்பவை கோடல்
உளப்படத் தொகைஇ
எடுத்த நான்கே
நான்கென மொழிய''
—(தொல். இளம்-260.)

தலைவிக்குத் தலைவனிடம் பற்று ஏற்பட்டுவிட்டால் மனம் ஒரு நிலைப்படுவதில்லை. அவனையே காண வேண்டும் என்ற எண்ணம் துளைக்கும். கல்லூரி மாணவி என்றால் காலமெல்லாம் கற்பனைகளை எண்ணி, எண்ணி உடல் இளைத்துத் துரும்பாகிவிடும். தோழியர்கள் உடல் இளைத்த காரணம் என்ன என்று துளைப்பர். வீட்டில் அம்மா - அப்பா- தங்கை - தம்பியர் அனைவருமே தனக்கு எதிரி என்ற எண்ணமே ஏற்படும். தலைவனைச் சந்திக்கத் துணையாவாரே தன் துணைவி என்ற எண்ணம் மேலெழுதல் இயல்பு. உணவுமுதல் உறக்கம்வரை தலைவன் நினைவுதான். விளையாட்டிற்குக் கூட வெளியில் செல்ல மனம் ஒப்புவதில்லை. இவ்வாறான வேளையில் எங்கோ சென்ற வேளை தலைவனைக் கண்டுவிட்டால் தலைவிக்கு வேறு மகிழ்ச்சியே வேண்டாம். பிறர் புறததே ஒளிந்துகொண்டு மற்றவர் அறியாவண்ணம் - தலைவன் அறியும் வண்ணம் தலைகோணிக் காணும் பான்மை களிப்புடையது. அவனைப் பார்த்தாலே அவளுக்கு மகிழ்ச்சியாகும்.

''தெரிந்துடம் படுதல்
திளைப்புவினை மறுத்தல்
கரந்திடத் தொழிதல்
கண்டவழி உவத்தலொடு
பொருந்திய நான்கே
ஐந்தென மொழிப''

ஆறாவது மெய்ப்பாட்டினைக் கண்டு ஒருவாறு நாம் தலைவியின் உள இயல்பை உணரமுடியும். அவள் அழகி-கண்கள் இரு கயல்கள்தான், பார்த்துக் கொண்டிருந்தால் பசி வராது. அவள் தலையலங்காரம் செய்யாத நாளே பிறவாத நாளாகும். அத்தகையவள் தலைக்கோலம் செய்யாது இருத்தல் ஒரு குறி; அவ்வாறு கோலம் செய்யும்பொழுது வெறுப்புடன் வெளியே போகவேண்டுமே என்பதற்குக் கடனுக்காகச் செய்தல் உண்டு. எப்பொழுதும் எப்பொருளிடத்தும் விருப்பம் இன்றி வெறுத்துப் பேசுதல், ''விரைவில் இறக்கப் போகின்றேன்'' என்று வெளிப்படக் கூறுதல், ''இனிமேல் அத்தலைவனைப் பெறமுடியாது; என் வாழ்வும் சுவைப்படாது - நான் இறப்பதே மேல்'' என்பனபோன்ற எண்ணங்கள் மேலிட்டால் தோழியரிடம் புலம்பி ஏதேனும் கூறுதல் - இவ்வகையான் மெய்ப்பாடுகளுள் ஒன்று கண்டாலும் பெற்றோர் அதனை அறிந்து,

''காதலர் இருவர்
கருத்தொரு மித்து
ஆதரவு பட்டதே இன்பம்''

என்ற முதுமொழிக்கு இணங்க, (தலைவிக்கு ஏற்ற தலைவனை அறிந்து) மணம் முடித்துவைத்தலே நல்ல செயலாகும்.

★

அடுத்த கிழமை –
தொல்காப்பியத்தில் ...
''உவமச் சிறப்பு''

சிங்கத் தமிழன் - சிங்களத் தமிழன்!

(இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கட்கு வாழ்த்துரைக்கும் பாடல் இது.)

தாய்த்திரு நாட்டிலி ருந்துபி ழைப்பவர்
தன்னை மறந்தாலும்—செல்
சேய்த்திரு நாட்டிலி ருப்பவர் தந்தமிழ்ச்
செல்வம் மறப்பாரோ?
''காய்த்ததும் சோலை கனிந்ததும் எந்தமிழ்ச்
காளைய ராலன்றோ?''—என
ஆர்த்து முழங்கிய சிங்கத் தமிழ்மகன்
அருமணி நாயகமே!

''வாழப் பிறந்தவர், வாழ்வை வளர்த்தவர்
மான மிகுத்தவரே—உயர்
ஈழத் தமிழ்க்குடி ஆனவர் என்பதை
ஈழம மறந்திடுமோ!
சோழர்கள் பாண்டியர் சேரரின் நாட்களில்
தூய மனத்துடனே—வன
வேழமெ னப்புகுந் தீழநி லத்தினை
வென்ற தமிழ்க்குலமே!

சேர்ந்துசெ யல்பட வாரும்''என் றேமொழி
செப்பிய நாயகமே — கை
தேர்ந்த தமிழ்த்தலை வோனெனப் பேர்பெறும்
செல்வ(நந்) நாயகமே!
சோர்ந்து கிடந்தவர் தோள்களித் தார்அவர்
சொற்பொழிவன்மையிலே! — எது
நேர்ந்திடி னும்தமிழ் ஈழநி லத்தினில்
நின்று நிலைபெறுமே!

வாழிய சிங்களம்! வாழிய செந்தமிழ்!
வாழிய நாயகமே!
வாழிய வாழிய ஈழத் தமிழ்க்குலம்
வாழிஎந் நாளிலுமே!
ஆழியும் வானும் அரும்புவி யாவையும்
ஆர்கதிர் வெண்மதியும்
வாழிய காலமும் செல்வ(நந்) நாயகம்
வாழிய வாழியவே!

கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 15-8-'59 | இதழ் 9

கொட்டும் தேளாகிய நேருவே! உமக்குக் குழிவெட்டும் நாள் தொலைவிலில்லை!

கொடுமைக்குக் கோபுரம் கட்டிவிட்டனர்!

வளைந்த செங்கோலுக்கு வரவேற்புக் கூறிவிட்டனர்!

வரண்ட வாழ்வுக்கு வாழ்த்துக் கூறிவிட்டனர்!

தான்தோன்றித்தனத்துக்குத் தோரணம் கட்டிவிட்டனர்!

மலைஞாலத்து ஆட்சியில் தில்லி மூலவர்கள் தலையிட்டுவிட்டனர். ஆம்! அழகுப் பொழில் கவலைக் குளமாகிவிட்டது!

மக்களாட்சிப் பண்பு! இனி, காகிதத்திலும் காணமுடியாத கனவு அது!

நேர்மை! நீதி! ஒழுக்கம்! அறம்! இவற்றை, இனி நினைக்கவும் முடியாது!

ஆளவந்த அழகு "பூபதியர்" நடுநிலைக்குக் கையறு நிலைபாடி விட்டனர்!

இந்திராதேவியார் ஆட்டத்திற்கு நட்டுவாங்கம் செய்யும் நேரு கொட்டும் தேளாகிவிட்டார்; நீதியை வெட்டும் வாளாகிவிட்டார். ஆம்! தோழர்களின் ஆட்சிக்கு முடிவு கட்டிவிட்டனர்! படுகுழி வெட்டியதோடு நில்லாது, "எல்லாம் பண்டிதரின் செயலே!" என்று தப்பித்துக்கொள்கின்றனர். மலைஞாலத்தின் அமைதியைக் குலைத்துவிட்டதைத்தான் சொல்கிறேன். 'கிளிசரைன் கண்ணீர்" வடிப்போரின் முகமூடியைத்தான் கிழிக்கிறேன்!

யாரைக் கேட்டு, எதிர்க் கட்சியினரை விரட்டினர்? சங்கரையும் மன்னத்தையும் கேட்டு!

சங்கர் யார்? பதவி கிடைக்கும்போது காங்கிரசில் ஒட்டிக்கொள்ளும் பகல் நாடகதாரி; பல்லாண்டு பாடினன் முன்னொரு காலத்தில் "திவான் ஆட்சி"க்கு. வகுப்பு வாதத்தின் வளர்ப்புப் பிள்ளையுங்கூட. மன்னத் பத்ம நாபன் மன்னராட்சிக்கு வாழ்த்துக் கூறிய நரி; நாயர் சமூகத்தை வகுப்பு வெறிக்கிரையாக்கி "இந்து மகாமண்டலம்" ஏற்படுத்தி அமைதியைக் குலைத்த வஞ்சக வேங்கை! கூட்டணியில் இன்று கிருத்தவர்களைச்சேர்த்துக் கொண்ட இதே ஆள், "அன்னியர் பணத்தால் வாழ்வோர் கிருத்தவர்!" என அன்று குற்றம்சாட்டியதை அறிவோம். அன்று கிருத்தவர்களை அழித்தே தீருவேன் என்று புறப்பட்ட ஆளும், அதை எதிர்த்துக் கச்சை கட்டிய கிருத்துவரும் வகுப்புவாதத்தால் வளம்பெற்ற சங்கரும், கேரள அரசை எதிர்த்தனராம்; தில்லியின் கேளாக் காதிலும் கேட்டுவிட்டதாம்! வகுப்பு வெறி பிடித்தலையும் இந்தக் கும்பல் கூலிக்கு ஆடிய நாடகம், மக்களின் அணி வகுப்பாம்! நேருவே, உம் கண்ணில் கொள்ளியைத்தான் வைக்க வேண்டும்......

மதச் சார்பற்ற அரசாம் இந்திய அரசு. ஆனால் மதவாதிகள் இட்ட வெறிக் குரலுக்கு வளைந்துவிட்டது.

மாணவர்கள் அரசியலில் கலக்கக்கூடாது!—இது காந்தியின் சீடர்கள் நாள்தோறும் வாந்தியெடுக்கும் பொன்மொழி. மலைஞாலத்தின் அமைதியைக் குலைத்தோர், மாணவர்களைத் தம் சூதாட்டக் காய்களாக்கிக் கொண்டு விட்டனர். தேபரும் ஆதரித்துவிட்டார்!

கல்விச் சட்டத்தை வைத்துத்தான் இத்துணைத் தொல்லையும். அது குடியரசுத் தலைவரால் ஒப்பப்பட்டது; சட்ட சபையிலும் நிறைவேற்றப்பட்டது! நீதி முறையின் எல்லா முத்திரைகளும் குத்தப்பட்டுவிட்டன! ஆனாலும் அதை மறுத்து ஒரு கிளர்ச்சி; அதனையும் ஆதரித்துத் தலையிட்டுவிட்டது நடுவிடம்! அவனவன் கூட்டிவரும் பட்டினிப் பட்டாளத்திற்கு—கூலிப் படைக்கு மதிப்பளிப்பதென்றால், மக்களாட்சிப் பண்பின் செழிப்பெங்கே வரும்? எப்படி வரும்? மக்களாட்சி விதிப்படி—தம் ஒப்பப்படி, இயங்கும் அரசுக்கே சாவோலை தீட்டுகிறார், அவர். காசிப் பார்ப்பனரின் காலைக் கழுவிக் குடித்தவர் அன்றோ அவர்! சர்வாதிகாரத்தின் காலைக் கழுவிக் குடிப்பதா கசக்கும், அவர்க்கு?

பட்டமும் பனம்பள்ளியும், பழுத்த பதவிப் பித்தர்கள். இப்போது இங்கே நடக்கும் பதவிச் சண்டைகளே இதற்குச் சான்றுகள்! இந்தத் தன்னலத்தார் சொன்னதற்காக, பாடை கட்டுவதா நேர்மைக்கு?

கண்டன் நாயர், ஒரு செல்லாக் காசு. அது "கோபுரத்தைத் தாங்கும் குருவி"! அதற்கும் மதிப்பா? ஐயகோ, நீதியே!

சென்னை மாநிலத்தை ஆளும் "சிகாமணிகள்" "சினிமா"க்காரர்களைத் திட்டியே வாழ்வோர். நேருவும் அப்படியே! ஆனால், கேரளத்தில் நடந்த வேடிக்கைக்கு ஆள் சேர்க்க ஒளியிழந்த திரைத்தாரகை ஒன்றின் துணையை நாடியிருக்கின்றனர். ஆகா, எவ்வளவு பெரிய பகல் வேடப் போராட்டம்!

"கிடக்கிறது, பழம் பஞ்சாங்கம்; கிழித்தெறிந்துவிடு!" என்று இருக்க முடிகிறது? இது வாழ்வு—உயிர்ப்புப் போராட்டமாயிற்றே, எதிரணியினர்க்கெல்லாம்! எதிரணியினர் எங்கு ஆண்டாலும், கூலிப் படை திரட்டிக் கூவி யழைத்துக் குழப்பம் செய்துவிடுவர், காங்கிரசார். தோழர்களே! இதுவே நேருவின் சேதி! நிலைக்குமா நீதி? கண்டித்திடுக, இவ்வன் செயலை; துண்டித்திடுக, திருட்டின் கழுத்தை!

மொத்தமாக...

கேரளம், இன்னொரு சுடுகாடு!

மலைஞாலம் தரும் சேதி ஒரு கொலைக்காதை!

திருவனந்தை கூறும் கருத்துரை, எதிரணியினர்க்கொரு பாடம்!

வெம்பிய உளமுடைய சங்கரன் நம்பூதிரி பாடுக்கொரு வேண்டுகோள்: "நீங்களும் உங்கள் தோழர்களும் முதலில் சமுதாயத்தைச் சீர்திருத்துங்கள்! அது வென்றபின்தான் நீங்கள் விழையும் பொருளியல் சீர்திருத்தம் வெல்லும்! உங்கள் புகழ் சொல்லும்!" தில்லிக்கொரு கண்டனம்: "தென்னகத்தின் அமைதியைக் குலைப்பதற்கென்றே வந்துள்ள உம் ஆட்சி வாழாது; வாழ்ந்தால், கேடுமாளாது!"

★

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடு

22-8-'59 சனி காலை 9 மணி முதல் இரவு 9 மணிவரை

சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடைபெறும்

தலைவர்:

சு. ஆறுமுகம் பி ஏ., (பி எல்.), எம் சி.

[துணைத்தலைவர், கோவை நகராட்சி மன்றம்]

திறப்பாளர்:

எஸ். டி. சோமசுந்தரம் (பி இ)

[அண்ணாமலைப் பல்கலைக் கழகம்]

கோவை-செழியன் பி.ஏ., பி. இராசமாணிக்கம் பி.ஏ, (பி.எல்.), பி. எஸ். மணியம் பி.ஏ., (பி.எல்.), உ. கணபதி எம்.ஏ., எம். எஸ். வேங்கடாசலம் எம்.ஏ., கே. ஏ. பழனிசாமி பி.ஏ., பி.எல்., ஏ. பெரிய சாமி பி.ஏ., பி.டி., சி. என். ஏ. பரிமளம், சற்குணம், அப்துல்காதர் பி. எஸ்சி., மு. சக்ரபாணி (பி. ஏ. ஆனர்சு.), தி. அழகிரிசாமி (பி. ஏ. ஆனர்சு), கு. இந்திரசித் (பி. ஏ.), தி. ரா. விசுவநாதன் (பி.காம்), அருர்பன், பி. ராஜாராம் (பி.ஏ. ஆனர்சு), வெ. கிருட்டிண மூர்த்தி எம்.ஏ., (பி.எல்.), உ. பில்லப்பன் எம். ஏ., சவுந்தரராசன் பி.ஏ, (பி.எல்.), கே ஏ. கிருட்டிணசாமி பி.ஏ. ஆனர்சு), சு. ரா. பாலசுப்ரமணியம் பி. ஏ. (ஆனர்சு), இ. கிருட்டிணன் (பி. எஸ்சி.), சங்கரபாண்டியன் பி ஏ., (பி.எல்), டி. கே. கோபாலகிருட்டிணன் (எம். ஏ.), என். வி. என். சோமு (பி. ஏ.), பானுமதி, சீ. சோமசுந்தரம் பி. ஏ., மோசஸ் பி. ஏ., சா. பெ. மலைச்சாமி (பி. ஏ. ஆனர்சு), அ. கலைக்குயிலன் பி. ஏ., சத்தியநாதன், சேதுராமன் பி ஏ., மா. பாண்டியன் ஆகியோர் பேசுவர். அனைவரும் வருக!

செயலாளர்கள்:
நா. இராமானுசம் பி. காம் (ஆனர்சு)
ப. நெடுமாறன் பி. ஏ. (ஆனர்சு)
வி. மா. வெற்றிவேந்தன்
மதிவாணன்,
கா. வேழவேந்தன்,

வ. கு. தலைவர்:
டி. கே. பொன்னுவேலு பி. ஏ.

★

பொருளாளர்:
வெ. நாமநாதன்.

நன்கொடை அணா 8.

அடுத்த இதழில் தொடர்கிறது!

கண்ணதாசன்

எழுதும்

"ஊமையன் கோட்டை"

(தொடர் கதை)

எழுத்தாளர் "மகா" நாடு!

சவலைக் குழந்தைக்காரர்களின் சவடால் பேச்சுகள்!
சவமொழிக்காரர்களின் கொழுத்த வாதம்!
நன்றி கொன்றோர் இவர், பன்றியினும் கீழோர்!
நெய்யும் சோறும் தந்தோரிடமே பொய்யும் புளுகும் விரிக்கின்றனர்!

இத்திங்கள் இரண்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமை, சென்னைத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டிலே "தமிழில் உரை நடை" எனும் பொருளில் ஒரு கருத்தரங்கம் நிகழ்ந்தது. அவ் வரங்கிலே நான் கண்டனவும் கேட்டனவுமே என்னை இக்கட்டுரையை எழுதத் தூண்டின.

நல்ல தமிழ் எழுதாமை, நல்ல தமிழ் வளர்ச்சியைத் தடைசெய்வது,- இவையே சிலரின் கொள்கைகளாகத் தோன்றுகின்றன.

நல்ல தமிழ் எழுதவியலாமையை யேனும் பொறுத்துக் கொள்ளலாம். அது அவரவர் பழக்கத்தையும் ஆற்றலையும் பொறுத்தது. ஆனால் நல்ல தமிழ் எழுதாமையையே கொள்கையாகக் கொண்டு, அதனை மறைப்பதற்காகப் பல போலிச் சாக்குகளைக் கூறுவதும், அதுவே தமிழை வளர்ப்பதாகக் கூறுவதும் தாம் வேதனை தருகின்றன.

"நல்ல தமிழ் வேறு; தூய தமிழ் வேறு. நல்ல தமிழ் எழுதினால் போதும்; தூய தமிழ் வேண்டாம்" என்பர் ஒரு சாரார். இது அடிப் படைக் கருத்திலேயே தவறுடைய தாகும். ஏனெனில் நல்ல தமிழ் என்று கூறும்பொழுது அதில் தூய் மைப் பண்பும் அடங்கிவிடுகின்றது. தூய தமிழ் எழுதும் ஒரு சிலர் நல்ல தமிழ் அதாவது பிழையற்ற தமிழ் எழுத முடியாதவர்களாக இருக் கலாம். ஆனால் நல்ல தமிழ் எழுது கின்றேன்-பிழையற்ற தமிழ் எழுது கின்றேன்-என்று ஒருவர் கூறிக் கொள்வாரானால் அவர் தூய தமிழில் தான் எழுதியாக வேண்டும்.

அப்படியானால், தூயதமிழ் என்றால் என்ன? இந்தக் கேள்வி பிறக் கின்றது.

தூய தமிழ் பிறமொழி கலவாத தமிழ்.

அப்படியானால் தமிழில் பிறமொழி கலக்கக்கூடாதா? தமிழில் பிற மொழிச் சொல்லைக் கலந்து எழுதக் கூடாதா? கூடாதுதான்.

ஒரு மொழியில் பிறிதொரு மொழி எவ்வாறு கலக்க முடியும்? அவ் வாறு கலந்தால் புதியதொரு மொழி யல்லவா உண்டாகிவிடும்!

சிறிது எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஒரு மொழி வளரவேண்டுமென் றால் வளர்ந்து வரும் புதிய புதிய கருத்துக்களைத் தெரிவிக்கப் புதிய புதிய சொற்கள் தேவை. அச் சொற்கள் இன்றேல் மொழியில் வளர்ச்சியும் இல்லை. இது உலகம் ஒப்பும் உண்மை. ஆதலின் காலத் துக்கும் கலைவளர்ச்சிக்கும் வேண்டிய வாறு நம் மொழியிற் புதிய சொற்களை உருவாக்குதல் வேண்டும். தமிழ் வேரினின்று அப்புதிய சொற்களை ஆக்கவியலாத விடத்தோ, ஆக் குவது அரிதாகவிருக்குமிடத்தோ, பிறமொழிச் சொற்களின் வேரினின்று அப்புதிய சொற்களை உருவாக்கிக் கொள்ளலாம். மேலும், வேற்று மொழியுடனும் அதன் நாகரிகத் துடனும் தொடர்பு கொள்ளும்போது, அவ்வேற்றுமொழிக்கே உரித்தான சில கருத்துக்களைத் தமிழிற் கொண ரும் இன்றியமையாமை நேரும் பொழுது, அல்லது சிற்சில பொருள் நுண்மைகளை விளக்குமிடத்து அவ் வேற்றுமொழிச் சொற்களைத் தமிழ் மரபுக்கு இயைவித்துப் பயன்படுத் திக் கொள்ளலாம். இதற்குத்தான் தொல்காப்பியம் விதி வகுத்திருக் கின்றது.

எனவே தமிழிற் பிறமொழிச் சொற் களைக் கலப்பதில் தவறில்லையே என்று கேட்கலாம்.

தமிழிற் பிறமொழிச் சொற் களைக் கலப்பது வேறு. பிற மொழிச் சொற்களைப் பயன்படுத் திக் கொள்வது வேறு.

குழந்தைக்கு மருந்து ஊட்டுவது வேறு; மருந்து என்ற பெயரால் நஞ்சினை ஊட்டுவது வேறு.

மருந்து என்ற பெயரால் நஞ்சினை ஊட்டாதே என்று கூறினால், "மருந்தே வேண்டாம் என்கின்றான், குழந்தையின் வளர்ச்சியைத் தடை செய்கின்றான்" என்று இன்று சிலர் ஓலமிடுகின்றனர்.

கைக்கு வந்த வாய்க்கு வந்த வேற்றுமொழிச் சொற்களை எல்லாம் கையாண்டு, தமிழ் வளர்கின்றது என்று சொன்னால், வேதனையாக இல்லை? ஒவ்வொருவரும் தங்கள் தங்கட்குத் தெரிந்த வேற்றுமொழிச் சொற்களைக் கையாண்டால் பின்னர் தமிழ் என்ற தனிமொழியை எங்கே காண முடியும்?

எழுத்தாளர் மாநாட்டுக் கருத் தரங்கிலே பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்கள், தமிழில் வந்து வழங்கும் பிறமொழிச் சொற்கள் தாமாக வந்துவிடவில்லை என்றும், அந்தந்த மொழியின் ஆதிக்கம் தமிழகத்தில் ஏற்பட்ட போது கலந்தவையே என்றும் கூறினார். பொது நிலையில் ஒரு மொழியில் மற்றொரு மொழி வந்து தானாகக் கலப்பதில்லை என்றும் அவர் கூறினார்.

இதில் ஒரு பெரிய உண்மை அடங்கி இருக்கின்றது. இன்று தமிழிலே வழங்கும் வடமொழி, ஆங்கிலச் சொற்களில் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு இன்றி யமையாமை குறித்துத் தமிழரால் பயன்படுத்தப் பட்டவை அல்ல! அல்ல! எனவே அவை எந்த வகை யிலும் தமிழை வளர்க்கவோ வளப் படுத்தவோ பயன்படுபவை அல்ல என்பதே அந்த உண்மை.

வடமொழியையே முதலில் தாய் மொழியாகக் கொண்டவர்கள், வட மொழி நாகரிகத்தில் இன்றும் பெருமை பாராட்டுபவர்கள், வட மொழியை வளர்க்க அரும்பாடு பட்டுக்கொண்டிருப்பவர்கள், தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தாதிருப்பதே தங்கள் குறிக்கோளாகக் கொண் டிருப்பவர்கள் தங்கள் தங்கள் அடுப்பங்கரைகளிலும் திண்ணைகளி லும் பேசும் சொற்களை யெல்லாம் தமிழை வளர்க்க வந்த பிறசொற்கள் என்று இலக்கியத்தில் எடுத்தாள்வது என்ன முறை?

இதனைக் கேட்டால் தமிழ் வளர்ச் சியைத் தடை செய்வது என்று பொருளா?

ஆங்கிலம் பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொண்டுதான் வளர்ந்ததாம். தமிழும் அவ்வாறு வளரவேண்டுமாம்! ஆங்கிலம் பிற்பட்ட மொழி; தமிழ் போன்ற உயர்தனிச் செம்மொழி அல்ல என்பது ஒருபுறம் இருக்க, ஆங்கில மொழியாளர் எத்தகு முறை யினைக் கையாள்கின்றனர் என்பதை யாவது எண்ணிப் பார்க்க வேண் டாமா?

பொதுவாக ஆங்கிலம், இலத்தீன் மொழியினடியாகப் பிறந்த ஒரு மொழி. தமிழோ முதல் தாய்மொழி. அதுவிருக்க, ஆங்கிலம் வளர்ச்சி யடைந்த பின்பும் அதிற் பிறமொழிச் சொற்கள் புகுத்தப்பட்டன என்றால், விதிமுறை அற்றா புகுத்தப்பட்டன?

தங்கள் மொழியில் குறிப்பிட்ட கருத்தினைத் தெரிவிக்கச் சொல் இல்லாத போதோ, பிறமொழியாளர் வாழ்வோடு தொடர்பு கொண்ட சொற்கள் தேவைப்படும்போதோ தான் அவ்வாறு சொற்கள் கையாளப் படுகின்றன. 'பந்தல்', 'கட்டுமரம்' என்பன, ஆங்கிலேயர் தமிழரோடு தொடர்பு கொண்ட காலை, அவற்றின் தனிச் சிறப்பைத் தங்கள் மொழியில் கொணரவேண்டிய நிலையில் தானே ஆங்கில மொழி அகராதியுட் புகுந் தன! மேலும் "கட்டுமரம்" என்ற சொல்லை "Kattumaram" என்றா கொண்டனர்? 'Catamaran' என் றல்லவா தங்கள் மரபுக்கேற்பத் திரித்துக் கொண்டனர்! அதனைத் தமிழ்ச் சொல் என்றும் அவர்கள் கருதுவதில்லையே. தமிழ்ச் சொல் லின் அடியாகப் பிறந்த ஆங்கிலச் சொல்லாகத்தானே கருதுகின்றனர்!

கட்டுமரம் மட்டுமின்றித் தோணி (Thoni) படகு (Pataku) என்று அவர்கள் தங்கள் மொழிவளத்துக் காக இவற்றையும் சேர்த்திருக்க லாமே! ஏன் அவை ஆங்கில அகராதியுட் புகவில்லை?

Friendship என்ற சொல்லோடு Natpu (நட்பு) என்ற சொல்லும் இருந்தால் ஆங்கிலத்திற் சொல் வளம் மிகுமல்லவா? ஏன் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை? அவர்கள் அச்சொல்லை எடுக்க எவ்வித இன்றி யமையாமையும் நேரவில்லை. அதோடு அவர்கள் மொழிக்கென்று ஒரு மரபு இருக்கின்றது. அதனையும் அவர்கள் காக்கின்றார்கள்.

ஆனால் தமிழில் மட்டும், "நட்பு", "கிழமை", "கேண்மை", "தோழமை" முதலியன இருக்க, 'சிநேகம்' என்று எழுதினால் தமிழ் வளர்கின்றது என்று ஒரு சாரார் கூறுவது ஏன்?

'முழுமை'யும், 'நிறை'வும் இருக் கப் 'பரிபூர்ணம்' ஏன்? காணிக்கை, திருமுன் படைத்தல் முதலியன இருக்க, அர்ப்பணம், சமர்ப் பணம் முதலியன ஏன்? தொல் வரவு இருக்கப் பாரம்பரியம் ஏன்? பரிமாறுதல் இருக்கப் பரிவர்த்தனை ஏன்? 'நட்புறவு' இருக்க சௌஜன் யம் ஏன்? கொண்டல், முகில், எழினி, கார், மழை இவை இருக்க 'மேகம்' என்றுமட்டும் வேண்டு மென்றே எழுதுவது ஏன்?

மக்கட்குப் பழக்கமாகிவிட்டன வாம்! அவ்வாறு சொன்னால்தான் மக்கட்குப் புரியுமாம்! ஏன் அவை மக்கட்குப் பழக்கமாயின என்ற ஆழமான கேள்வி ஒரு புறம் இருக்க, பழக்கமாகி விட்டால் அதைத் தான் எழுத வேண்டுமா என்ற மற்றொரு கேள்வியும் எழுகின்றது.

மக்கள் புரிந்துகொள்ள வேண் டும்; புகழ வேண்டும் என்று இலக் கியத்தின் தரத்தைக் குறைத்துவிடக் கூடாது என்று கூறுபவர்கள், வட மொழி ஆதிக்கத்தால் மக்கள் மறந்து போன நற்றமிழ்ச் சொற்கள் மீண் டும் மேலெழுந்து வந்துவிடக்கூடாது என்பதற்காக அவற்றுக்கேற்ற வட சொற்களைத்தான் கையாள வேண் டுமா?

— 10-ம் பக்கம் —

பொருள் விளங்கினால் எழுதுக!

கீழே உள்ள செய்தி, தமிழ் மொழியில் வெளியாகும் நாளித ழான "தினமணி"யில் வந்துள் ளது. "தமிழின் செழுமைக்கும், உயர்வுக்கும் புதுமைக்கும் பாதை வகுக்கும் அம்மாஞ்சி" தேசிகனின் கட்டுரைகளைத் தாங் கிப் பெருமைப்படும் "தினமணி" தரும் இச்செய்திக்குப் பொருள் விளங்கினால் எழுதுக!

உபாகர்மமும் ரிக்வேதிகளும்

சிருங்கேரிமடம் கருத்து

காட்டுப்புத்தூர், ஆக. 8— ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குருவின் அந்தரங்கக் காரியதரிசியிட மிருந்து கீழ்க்கண்ட தந்தி வந் துள்ளது:—

சாஸ்திரங்களின் பிரகாரம் கர்க்கி சிராவணம் தோஷமில்லை. தட்சிண தேசத்தில் கர்க்கி சிராவணத்தை தோஷமெனக் கருதும் ரிக்வேதிகள் செப்டம்பர் மாதம் 14-ந் தேதி உபாகர்மம் செய்யவேண்டும். இதரர்கள் ஆகஸ்ட் 9-ந் தேதி உபாகர்மம் செய்யவேண்டும்.

—"தினமணி"
(மதுரைப்பதிப்பு, 8-8-59)

திரைமறைவில் நடக்கும் தீய வேலைகள்! மறைமலையின் தமிழில் குறை கண்டார்கள்! உடுத்த கலிங்கம் இழந்த சொக்கலிங்கம்! ஒதுங்கி யிருந்தால் அவர் பெயர் தப்பும்! தேசிகனுக்கென்ன? வாயுண்டு! கையுண்டு!

தரம் அறியார் புரட்டு!

1, 2-8-'59-ல் தமிழ் எழுத்தாளர் மாநாடு என்று அறிக்கை ஒன்று கண்டேன். மாநாடு நடக்கும் இராசாசி மண்டபத்திற்குச் சென்றேன், 1-8-59 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு. இடம் அகப்படாதோ என்று முந்திக்கொண்டு சென்றேன். ஆனல் நான் எதிர்பார்த்தபடி இல்லாமல் கூட்டம் குறைவாகவே இருந்தது மாநாட்டிற்குள் நுழைந்தபோது தமிழ் எழுத்தாளர் சங்க உறுப்பினர்களுக்கு ஒரு இலட்சணை தரப்பட்டது. அதில் மகாநாடு என்றும், அங்கத்தினர் என்றும் குறித்திருந்தது. சில உறுப்பினர்கள் மகாநாடு என்பதை அடித்து 'மாநாடு' என்று என்று எழுதியும் அங்கத்தினர் என்பதை அடித்துவிட்டு 'உறுப்பினர்' என்று எழுதியும் அணிந்துகொண்டனர். நல்ல முன்னேற்றம். சென்ற மாநாட்டில் இதுபோன்ற பரபரப்பு இல்லவே இல்லை.

முதல்நாள் மாநாட்டில் சிவபாதசுந்தரம் என்ற ஒருவர் வரவேற்பு உரை வழங்கினர். அவர் வரவேற்பு உரை படிக்கும்போது கூட்டத்தில் சில சில இடங்களில் சலசலப்பு ஏற்பட்டது. காரணம் அவர் தமிழ் எழுத்தாளர் இடையே நிற்பதை மறந்து, செத்த மொழிக்கு வக்காளத்து வாங்கி சுபதினம், குசலம், பரிவர்த்தனை, சிருஷ்டி, காலரி, சபாஷ், விமர்சனம், சௌஜன்யம், பரிபூரணம், அங்குரார்ப்பணம் முதலிய சொற்களை வலிந்து புகுத்தி அவர் மொழியில் சபாஷ் வாங்க நினைத்தார். பாவம்! பலர் 'யாரய்யா இந்த மனிதர்?' என்று கேள்விக் குறியிட்டு கேட்ட வண்ணம் இருந்தனர். அதன் பின்னர் தொடக்க விழா உரை நிகழ்த்திய கன்னடப் பேராசிரியர் திரு. மாஸ்த்தி வெங்கடேச ஐயங்கார் தமது உரையில், டெல்லி அரசினர் அந்தந்த மாகாண மொழியைப் புறக்கணித்தும், மாகாண மொழிகளுக்கு உரிய இடம் அளிக்காமல், பல மொழிகள் இருப்பதால் நாட்டின் ஐக்கியம் குலைந்துவிடாது எனவும், பல மொழிகளில் நிருவாகம் நடத்தும் யுகோஸ்லேவியா, சுவிட்சர்லாந்து முதலிய இடங்களில் ஒற்றுமை குலைக்கப்படாமல் மொழிவாரியாக நாட்டை ஆளுகின்றுர்கள் என்றும், இந்தியாவிலும் 12 மொழி மாகாணங்களையும் அவ்வவ் மொழிகளை அவ்வவ் இடங்களில் நிர்வாகத்துக்கு உபயோகிப்பதில் துன்பமில்லை என்றும், மேலும் இந்தி மொழியினை வலுக்கட்டாயமாகவும், நம்மைக் கேட்காமலும் வேண்டுமென்றே திணிக்கிருர்கள் என்றும், மணியார்டர் தாள்களிலும், பதிவு அஞ்சல் தாள்களிலும், அஞ்சல் அட்டைகளிலும் வேண்டுமென்றே இந்தியைப் பரப்புகிருர்கள் என்றும், கன்னட தேசத்தில் கன்னடத்திலும், தமிழ்நாட்டில் தமிழிலும் மேற்படி அஞ்சல் அட்டைகளில் பொறிக்கலாம் எனவும் கூறிச் சற்று வேகமாகவே இந்தியை எதிர்த்தார். கூட்டத்தில் இருந்த சிலர் "இதோ கன்னடத்தில் கழகக் குரல் கேட்கிறதே!" என்று மகிழ்ந்தனர்.

ஆனல் தொடக்க விழாவுக்குப் பிறகு இருவருக்குக் கேடயம் தரப்பட்டது. அதில் ஒருவர் பி. ஸ்ரீ. மற்றவர் தமிழ் துரோகி டி. எஸ். சொக்கலிங்கம். நான் உட்கார்ந்திருந்த நாற்காலிக்கு முன் பக்கத்தில் இருந்தவர் "அய்யா இவருக்குக் கேடயம் தந்தது கொடுமை. எலும்பும் தோலுமாக இருக்கும் பன்மொழிப் புலவர் வேங்கடராஜலு ரெட்டியாருக்குக் கொடுக்கச் சொன்னேன் என் தீர்மானம் நிறைவேறவில்லை" என்ருர். மற்ருெருவர் "இவர்தான் தினமணியில் இருந்து 1938-ல் இந்தி எதிர்ப்பு காலத்தில் எலி வளை எலிகளுக்கே" என்று எழுதிய உத்தமர். தினசரி பத்திரிகையை நடத்தி பல பங்குதாரர்களுக்கு நட்டத்தை உண்டாக்கியவர்! பல தொழிலாளர்களைப் பட்டினி போட்ட அருமையான மனிதர்" என்ருர்.

கேடயத்திற்கு நன்றி செலுத்த வந்த அறிவுப்பிழம்பு சொக்கலிங்கனர் நன்றி செலுத்துவதை மறந்துவிட்டு, மேடை இலக்கணமும் அறியாது, "எனக்குத் தமிழ் வளர்க்க கேடயம் தரவில்லை - தமிழ் வளர்ந்து வருவதைத் தடுத்து இந்தியை வரவழைப்பதற்கே கேடயம் தந்தார்கள்" என்று சொல்வதுபோல் தொடக்க விழா நிகழ்த்திய கன்னட ஆசிரியர் உரையைத் தாக்கி, "150 ஆண்டுகளாகத் தபால் கார்டில் ஆங்கிலத்தில் அச்சடித்தபோது கேட்காமல், இன்று சுயராஜ்யம் அடைந்த பிறகு இப்படிக் கேட்பது தவறு. மேலும் மந்திரிகள் நம்மைக் கேட்டுச் செய்ய வேண்டும் என்பதில்லை. நாம் யார் மந்திரிகளுக்குச் சொல்ல? மந்திரிகளுக்கு எதைச் செய்ய வேண்டும் என்று நன்ருகத் தெரியும். தபால் கார்டுகளில், மணியார்டர் தாள்களில் இந்தி நுழைகிறது என்று சொல்வது தவறு!" என்ருர். இதைக் கேட்ட முன்பக்கத்தில் இருந்த நண்பர், "நாம் வெற்றிலைபாக்கு கொடுத்து நம்மீதே காரி உமிழச் செய்தோம். தமிழுக்கும், தமிழருக்கும் தீங்கு தேடும் ஒருவருக்கு, தமிழ் அழியலாம், தமிழ்ப் பண்பாடு சிதையலாம், இந்தி வரலாம் என்று கூறும் ஒரு 'மகானுபாவ'ருக்கு, தமிழ் எழுத்தாளர் சங்கம் கேடயம் வழங்குகிறது என்று சொன்னல்-பிறமொழியாளர் இச்செய்கையைக் கண்டு எள்ளி நகைத்து தமிழர் நிலையைக் குறித்துப் பரிதாபப் படுவர்" எனக் கூறினர். முதல்நாள் மாநாடு இவ்வளவு அலங்கோலத்தில் முடிந்தது.

இரண்டாம்நாள் காலை 8 மணிக்கெல்லாம், நல்லெண்ணெய், இட்டலி, சாம்பார்-வடை, உப்புமா, காப்பியுடன் மாநாடு தொடங்கியது. "தமிழ் உரைநடை" என்பது பற்றிக் கருத்தரங்கு ஒன்று தொடங்கியது. அரங்கிற்கு சொல்லேர் உழவர், முத்தமிழ்க் காவலர், பேராசிரியர், டாக்டர் அ. சிதம்பரநாதன் தலைமை வகித்தார். "தமிழ் உரைநடை" பற்றிய விவாதத்தை திரு. ரா. ஸ்ரீ. தேசிகன் என்பார் தொடங்கி வைக்கும்போது-தமிழில் உரைநடை எப்படி வளர்ந்தது என்று சொல்லிக்கொண்டே வந்து, "ஆசிரியர் மறைமலை அடிகள் பட்டினப்பாலை ஆராய்ச்சி நூலில் ஒரு பக்கம் உள்ள வாக்கியங்களை அமைத்ததோடு தூய தமிழ்ச்சொல் வந்த இடங்களில் எல்லாம் அடித்து வேண்டுமென்றே தனித் தமிழ்ச்சொல் போட்டு எழுதியதாகக் காணப்படுகிறது. இது தமிழா?" என்று கேட்டார். மேலும் அவர் பேச்சில் திரு. வி. க. அவர்கள் நடையையும் கேலி செய்தார். உரைநடை வளர்ச்சியில் டாக்டர் மு. வ., ரா. பி. சேதுப்பிள்ளை, பண்டிதமணி, சோமசுந்தர பாரதியார், அறிஞர் அண்ணு முதலியவர்கள் உரைநடையைப் பற்றி பேச்சே இல்லை. மேலும் தனித்தமிழில் எழுதுவது நடையல்ல என்றும் கிண்டல் செய்தார். இந்த உரைநடை விவாதத்தில் பல மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் பேசினுர்கள். பலர் தமிழில் பிறமொழிகளைக் கலந்தால்தான் தமிழ் வாழமுடியும் என்று கூறியதோடு - பல தமிழ் ஆசிரியர்கள் நடையையும் கிண்டல் செய்தார்கள். குறிப்பாக ஜனசக்தி இதழின் துணை ஆசிரியர் ஒருவர் "ஓடினுள்; ஓடினுள்; வாழ்க்கை ஓரத்திற்கே ஓடினுள்!" என்ற ஓர் உரைநடையை—அதுவும் கலைஞர் மு. கருணநிதியின் உரைநடையைக் கிண்டல் செய்தார்.

இந்த அர்த்தமற்ற வாதங்களையெல்லாம் அறிஞர் திரு. கா. அப்பாதுரையார் சிறு சிறு மேற்கோள்கள் காட்டி தகர்த்தெறிந்தார். இடை இடையே பலத்த கைத்தட்டல் எழுந்தது. மேலும் ஆர்வத்தைத் தந்தது. மேலும் அவர் மறைமலை அடிகள் தான் இன்றையத் தனித் தமிழ் உரைநடை வளர்வதற்கும், பல உரைநடை எழுத்தாளர்களை உண்டாக்கி இருக்கும் முதல் மனிதர்-ஒரு நல்லாசிரியர் என்றும் கூறலாம் என்ருர். (பலத்த கைதட்டல்) தமிழில் பிறமொழி கலந்ததால் ஒரே இன திராவிட மக்கள் கலப்பு சத விகித காரணமாக கன்னடர், மலையாளர், தெலுங்கர், துளுவர் என்று பிரிந்தது போல மேலும் கலப்புகள் ஏற்பட்டு தமிழ் இனத்தை, பண்பாட்டை அழிக்க அடிகோலலாகாது. இதனல் வரும் கேட்டை உணராது கலப்பு வேண்டும்-வேண்டும் எனக் கூறுவது அர்த்தமற்ற வீண் வாதம் எனக் குறிப்பிட்டு விவாதத்தையே சூடு பிடிக்கச் செய்தார். அதைத் தொடர்ந்து திரு. அமீது எம். ஏ., அவர்கள் பேசும்போது "கலப்பு எங்கே நிகழ்வதாயினும் கவனமாயிருத்தல் வேண்டும். அதுவும் மொழித் துறையில் மிக மிக விழிப்போடிருக்க வேண்டும் வட சொற்களை வலிந்து வரவழைத்துத் தமிழில் எழுதுவது தமிழுக்குத் துரோகமிழைப்பதாகும்" எனவும், மேலும் "நல்ல தமிழ் எழுதுபவர்களை கேலியும் கிண்டலும் செய்வது தமிழ் அன்னையைப் பழிப்பதாகும்" என்றும் கூறினர். திரு. ஊ. செயராமன், மா. சு. சம்பந்தம் முதலியவர்கள் தக்க சான்றுகள் காட்டி மமதை பிடித்த அம்மாமி எழுத்தாளர்கள் மண்டையில் ஓங்கி அடித்திருக்கிறர்கள் சொல்லம்புகளால். கடைசியாகத் தலைவர் முத்தமிழ்க் காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதனர் தம் முடிவுரையில் கூறியதாவது

"இன்றைய கருத்தராய்ச்சியைத் தொடங்கிய திரு. ரா. ஸ்ரீ. தேசிகன் அவர்கள் 'மறைமலை அடிகள் வடமொழியின் சொற்களை விலக்கி உரைநடை எழுதினர்' என்றும், ஒரு பக்கத்திற்கு மேல் செல்லும் வாக்கியங்களைக் கொண்டதாய் அவருடைய பட்டினப்பாலை ஆராய்ச்சி இருக்கிறது என்றும், 'இது தமிழா?' என்றும் குறிப்பிட்டார்.

மறைமலை அடிகளாரின் தமிழ் — தமிழ் அன்ருயின் எதுதான் தமிழ்? மறைமலை அடிகள் எழுதியதை அடித்துவிட்டு, அடித்த இடங்களில் வேண்டுமென்றே தனித்தமிழ்ச் சொற்கள் போட்டிருப்பதாகத் திரு. தேசிகன் குறிப்பிட்டது வேடிக்கையாக இருக்கிறது. மறைமலை அடிகள் அவ்வாறு வடசொற்களை அடித்துத் தூய தமிழ்ச் சொற்களைப் பெய்து எழுதிய சுவடி ஒருவேளை திரு. தேசிகன் அவர்கள் கையில் இருக்கிறது போலும்! (பலத்த கை தட்டல்).

இன்றையத் தமிழ் உரைநடைக்கும்—தமிழ் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாய் இருந்த ஆசிரியர் மறைமலை அடிகளாரின் தமிழ்-தமிழ் அன்று என்ருல், பின்னர் 'எதுதான் தமிழ்?' என்று இந்தப் பேரவையில் கேட்க விரும்புகிறேன். (வெட்கம், வெட்கம் என்ற பலத்த ஒலி). ஆங்கிலப் பேராசிரியர் மெக்காலே போன்றவர்கள் ஒரு பத்திக்கு ஒரு வாக்கியமும், ஒரு பக்கத்திற்கு ஒரு வாக்கியமும் ஆக எழுதிய உரைநடைகளை இன்று இந்தியக் கல்லூரிகளில் மாணவர்கள் படிப்பதில்லையா? மேலும் சிலர் இங்கு 'தமிழ் இலக்கியம், உரைநடை என்னல் தான் வளர்கிறது' என்றும், "நாங்கள்தான் வளர்த்தோம், நாங்கள்தான் வளாத்தோம்" என்றும் கூறிப் பிறரைத் தாக்கிப் பேசினர். அவர்களுக்கு நான் கூறுவது நல்ல தமிழை வளர்ப்பவர்கள் எல்லாம் கல்லூரிகளிலும், உயர்நிலைப்பள்ளிகளிலும் உள்ள தமிழ்மொழி ஆசிரியர்கள் என்பதே. (பலத்த கை தட்டல்) மாணவர்கள் பிழை செய்தால், பிழையைத் திருத்தி அவர்களெல்லாம் நல்ல தமிழை வளர்க்கிருர்கள். அடியார்க்கு நல்லார், நச்சினர்க்கினியர், நக்கீரர் போன்றவர்களது உரைநடையால் தமிழ் வளரவில்லை என்று கூறித் தமிழ்ப் பேரறிஞர்களையும், புலவர்களையும் குறைகூறுவது இந்த எழுத்தாளர் சங்கத்தின் நோக்கமாயின், இதனின்று என்னையொத்த தமிழ் ஆசிரியர்கள் அனைவரும் விலகிக் கொள்கிறேம்.

— 8-ம் பக்கம் —



காரைக்குடிக் கவியரங்கம்

★★★ காரைக்குடித் திருக்குறட் கழகத்தார் தமது ஏழாவது குறள்விழாவை கடந்த திங்கள் 17, 18, 19-ம் நாட்களில் கொண்டாடினர். இறுதி நாளான 19-ம் நாளன்று காலை ஆசிரியர் **கண்ணதாசன்** அவர்கள் தலைமையில் ஒரு கவியரங்கம் நடைபெற்றது. தம் இன்சுவைப் பாடல்களால் தமிழன்னைக்கு ஒளி சேர்க்கும் கவிஞர் பலர் பங்கேற்றுத் தம் பாடல்களை அரங்கேற்றினர். அக்கவியரங்கத்தின் தலைப்பு **"குறள்நெறிக் குடும்பம்"** என்பதாகும். முதலில் தோழர் **பெரி. சிவனடியான் பி. ஏ.** அவர்கள் பாடிய பாடலைத் தருகிறோம். அடுத்த இதழில் தோழர் **"ரவி"** அவர்களின் பாடல் வரும்.

1. குறள்நெறிக் குடும்பத்தில் நண்பர்

"கவலையில்லா மனிதன்" தன் நிலையில் நின்று
காரிகைக்குப் "பூமுடித்து" விட்ட தாலோ
உவகையுடன் "மாலையிட்ட மங்கை" யோடிவ்
வூர்நடுவே "மருதுவை"ப் போல்வந்த தாலோ
எவரெதிர்த்தும் வெல்லமுடி யாத வண்ணம்
எடுக்கின்ற குறட்கழக விழாவைக் கண்டோ
இவண்தலைமை ஏற்குங்கால் மகிழ்வு கொண்டீர்?
எடுத்துரைப்பீர்! எம்கவிஞ! வணக்கம் ஏற்பீர்!

தென்னகத்துக் கவிக்குடும்பம் இங்கே இன்று
திரண்டொன்ருய் எழுந்ததெனில் ஐய மில்லை.
கன்னற்கவி முடியரசே! அரசின் பக்கம்
சுனிகின்ற தமிழண்ணல்! பகைவர் நாவை
இன்றமிழால் நின்றறுக்கும் நாச்சி யப்ப!
எழில்கொஞ்சும் "முத்தாரக்" கருணா னந்தம்
அன்பருணா சலம்! நாவுக் கரசு! நல்லீர்!
அருமைமிகு ரவிப்பெயரோய்! வணக்கம் ஏற்பீர்!

தேர்த்திருநாள் விழாக்களிலே கூட்ட மில்லை
தேரிழுக்க ஆளில்லை இந்தக் காலம்
தேர்நிலைக்கு வர இயலா(து) இடையில் நிற்கத்
திணறுகின்றார் தேரின்மேல் அமர்ந்த நண்பர்.
ஊர்நிலை இவ் வாறிருக்கக் காரணம் ஏன்?
உண்மைவிழா இதுபோன்ற விழாவென் றோர்ந்தார்
சீர்வளரக் குறள்பரப்பும் சிறப்பு மிக்கீர்!
திரண்டுவந்த தமிழ்க்குலத்தீர்! வணக்கம் ஏற்பீர்!

குறள்நெறியில் அமைகின்ற குடும்ப நண்பர்
கொள்வதன்முன் என்னுடனே கொஞ்ச தூரம்
பிறசிலரைக் கண்டுவர வருவீர் ஐய!
பெரியவர்கள் அவர்களெலாம்; நண்ப ரைப்போல்
பறந்துவந்து வரவேற்பார்; ஆனால் நீவிர்
பத்திரமாய்க் காத்திடுவீர் மடியை மட்டும்.
குறுநகையைப் பெருநகையாய் அதிரச் செய்து
கும்பிட்டுக் கூர்ந்துபணப் பையைப் பார்ப்பார்.

★★★ மேலே உள்ள படத்தில், கவியரங்கில் பங்குகொண்டோரும், தலைமை ஏற்ற கண்ணதாசனும், சிறுமி சரளாவும் காணப்படுகின்றனர்.

கண்பார்த்த நொடியில்,பை கைக்கு மாறும்.
கடவுள்போல் மறைந்திடுவார் அருமை நண்பர்.
உண்டியலில் பணஞ்சேர்த்து வைத்தார் கூட
உடைத்தெடுக்கச் சிந்நேரம் ஆகும்; இந்தச்
சண்டாள நண்பர்களோ இமைக்கு முன்னே
சரிக்கட்டி விடுவார்கள் ஆளைக் கூட.
திண்டாட்டம் வரும்முன்னே தெரிந்து கொள்வீர்
தெருக்கழுகு நண்பரிவர் என்ற செய்தி!

சுரண்டுதற்கே பலநண்பர் தோன்று கின்றார்;
தொல்லையெனில் உடனிருந்தே கழுத்த றுப்பார்
"பிரண்ட்"என்று ஆங்கிலத்தில் பேசிப் பேசிப்
பெரும்பொருளைக் கரைத்திடுவார்-இவர்க ளெல்லாம்
பெருச்சாளி நண்ப ரப்பா, வீடிருக்க
பெரும்பொந்தாய் அடித்தளத்தைத் துளைத்துச் சாய்ப்பார்
கருமருந்துப் புகைமூட்டி அழித்தா லன்றிக்
கடும்பெருச்சா ளிக்கூட்டம் ஒழியா திங்கே.

காப்பிக்குச் சிலர்வருவர்; நாசி ஏற்றும்
கைச்சிமிட்டாப் பொடிக்கொருவர் வந்து சேர்வர்;
சாப்பாட்டைத் திட்டமிட்டே வருவர் மற்றோர்;
சரிமுடிந்தால் போய்விடுவார்; திரும்ப மாட்டார்;
கூப்பாடு போட்டவராய்க் கொள்கை பேசிக்
குலவிடுவார், காசிலையேற் குழைய மாட்டார்.
"ஏப்பந்தான்" இவர்நமக்குச் சொல்லும் நன்றி.
இவரெல்லாம் வழிப்பிச்சைக் கார நண்பர்.

புதியவகை நட்பொன்று நாட்டி லின்று
புகுந்துளது, பெயர்சொன்னல் வெட்கம்! வெட்கம்!
அதன்பெருமை ஐந்தாண்டிற் கொருமு றைதான்
அறியவரும். அட்டாகம் குடிசை முன்னே
கதியற்றுப் பெரும்புள்ளி வந்தி றங்கும்;
கண்டதுமே கரங்குவித்துத் தழுவிக் கொள்ளும்;
நிதியீந்து நீள்கரத்தை வாக்கிற் காக
நீட்டுமிது பச்சோந்தித் தேர்தல் நட்பு.

"கூசாக்கள்", "சால்ராக்கள்", "காக்காய்", "ஒத்து"
கொடுத்துவிட்டார் இப்பட்டம் முன்பே நாட்டில்.
பாசாங்கு செய்துபகுத் தறிவை விற்றுப்
பசிபோக்கத் திரிபவரே மேலே உள்ளார்
கூசாமல் கூறுகின்றார் இவர்க ளெல்லாம்
கொடுப்பவரைத் தம்மினிய நண்ப ரென்று;
தாசானு தாசரிவர் கொண்ட நட்புத்
தலையாட்டித் தஞ்சாவூர் பொம்மை நட்பு.

மறங்கூறி அறங்காட்டும் நோக்கத் தோடு
மாசுடைய நட்புறவின் வகையைச் சொன்னேன்
அறங்கூறும் குறள்நட்பை அடுத்துக் காண்போம்.
அத்தனையும் மனவிளக்கம்; வாழ்க்கைப் பாதை;
பிறை மதிபோல் வளரும்அறி வுடையார்நட்பு;
பேதையரின் நட்புமுழு மதிபோல் தேயும்.
அரையணிந்த துணிநெகிழ விரையும் கைபோல்
அன்பருறும் துயர்போக்க முந்தும் நட்பு.

பணத்திற்குப் புகழுக்குப் பதவிக் கென்று
பல்லாயி ரம்வகையில் நட்பைக் கண்டோம்.
பிணத்திற்கே ஒப்பாகும் இந்த நட்புப்
பேணுநினைத் தால்அழுகி நாற்றம் காணும்
உணர்ச்சியினால் ஒன்றுவதே உண்மை நட்பாம்.
உரக்கஇதை ஒலிப்பதுநம் குறளின் ஏடு.
வணங்குகிறேன் வள்ளுவனை மாற்ற மின்றி.
வையமுள்ள வரைக்குமிந்தக் கருத்து நிற்கும்.

ஆராய்ந்து நண்பர்களைப் பெறுதல் வேண்டும்.
அஃதின்றேல் சாவைப்போல் துயரஞ் சேரும்.
நேர்மையுள குடிப்பிறந்து பழிக்கு நாணும்.
நெஞ்சத்தார் தமைக்கொடுத்தும் கொள்ளல் வேண்டும்.
பாராண்ட தமிழ்மன்னன் அதியன் ஔவைப்
பாவலர்க்குக் கனியீந்து நட்பைக் காத்தான்.
கூரான கத்தியினும் கொடிது, வாழ்வில்
கூடிவிட்டுத், தாழுங்கால் விலகும் கேண்மை.

பண்பற்ற நண்பரிடம் பழகல் தீமை
பழகிவிடின் பணமீந்தும் விலகல் மேன்மை.
புண்படவே நேர்ந்தாலும், பண்புள் ளாரைப்
பொறுத்திருந்து காத்திடுதல் நட்பின் தன்மை
எண்ணற்றோர், சொல்வேறு செயல் வேறாக
இயங்குகின்றார்; எதுவரினும் அஞ்ச மாட்டார்.
மண்டியிட நேர்ந்தாலும் மனஞ் சகிப்பார்;
மயிர்பிடிக்க வந்தாலும் மற்போர் செய்வார்.

— 12-ம் பக்கம் —

தமிழ் உள்ளளவும் நாவலர் புகழ் ஒளி வீசும்!

அவரது வயது, ஆண்டு எண் பதைக் கடந்தது அண்மையில்.

தமிழ்ச் சங்கத்தவர் கூடி, "நாவலர் எண்பதாவதாண்டு நிறைவு விழாக் குழு" என்று ஒன்றமைத்து, விழாவுக் கான ஏற்பாடுகளைச் செய்தனர். 27-7-59 அன்று விழா நடந்தது.

விழா நாளன்று மாலை, மதுரை கூட்டுறவு வங்கிக்கட்டடத்திலிருந்து நாவலர் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். அது தமிழ்ச் சங்கத்தை வந்தடையும் வேளையில், வாயிலில் நின்று தமிழவேள் பொ. தி. இராசன் அவர்களும் விழாத்தலைவர் அவர்களும் எண்ணற்ற பொது மக்களும் வரவேற்றனர். பின்னர் விழாத் தொடங்கியது.

திரு. மகாராசன் அவர்கள் தலைமை ஏற்ருர் தலைவர் தம் முன்னுரையில், "பாரதியார் அவர்கள் தம் எண்பதாம் வயதில் கையில் கோலுடன் நடக் கிருர். அக்கோல் ஊன்றுகோலாகப் பயன்படுத்தப்படுவதில்லை; மாருக, தமிழுக்கு இழுக்கு ஏற்படும்போது இழிவெண்ணம் கொண்டோரைத் தாக்கவும், தமிழுக்காகப் போராடும் நீதிக்கோலாகவும் பயன்படுத்தப் படுகிறது. அவர் வ. உ. சி. யுடன் தொடர்பு கொண்டிருந்தார். அக் காலத்திலும், தூத்துக்குடியில் வழக் கறிஞராகப் பணியாற்றிய காலத் திலும், எவ்வண்ணம் நீதிக்குப் புறம் பான காரியங்களில் நெஞ்சுரத்துடன் போராடினரோ, அதைப்போலவே அன்றும், இன்றும், தமிழின் உயர்வுக் கும், நீதிக்கும் போராடுகிருர்" என்ருர்.

அடுத்து, பாராட்டுக்குழுவின் சார் பில் வாழ்த்துப்பாப் பாடப்பட்டது. தமிழ்ச் சங்கச் செயலாளர் திரு. கி. பழனியப்பன் அவர்கள், வெள்ளிக் கலம் ஒன்றினைப் பாரதியாருக்குப் பரிசாக அளித்து வரவேற்புரையாற் றினர். அவ்வுரையில், "பாரதி யாருக்கு விழாக் கொண்டாடப் பதினேழு ஊர்களிலிருந்து அழைப்புக் கள் வந்துள்ளன. இவ்விழாக் கொண் டாடுவதன் நோக்கம், பாரதியார் தமிழுக்கு ஆற்றியுள்ள அரும்பெருந் தொண்டேயாகும். இவ்விழாவால் பாரதியாரும், பாரதியரால் தமிழ்ச்சங் கமும் பெருமையடைகிறது" என்ருர்.

அடுத்து, தமிழ்ப் பேரறிஞர்கள் பலரின் வாழ்த்துக்கள் வாசித்தளிக் கப்பட்டன. பின்னர், செந்தமிழ்க் கல்லூரியின் சார்பிலும், திருச்சி - தமிழ்ச்சங்கத்தின் சார்பிலும், மதுரை எழுத்தாளர் மன்றத்தின் சார்பிலும் வாழ்த்துப்பாக்கள் வாசித்தளிக்கப் பட்டன. "கல்கி" ஆசிரியரின் சார்பில் மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

பின்னர், சிரு தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் அவர்கள் பாராட்டுரை வழங்கினர். அவ்வுரையில் "நான் நாவலர் அவர்களுடன் 25 ஆண்டு களாகப் பழகி வருகிறேன். எனக்கு அவரை வாழ்த்தும் வாய்ப்புக் கிட்டி யமைக்குப் பேருவகையும் பெருமை யும் கொள்கிறேன். தமிழுக்குப் பெருமையும் பூரிப்பும் அளிக்கும் 'பாரதித் தம்பி' வாழ்க! அண்ணு மலைப் பல்கலைக் கழகச்சுவர்கள், பாரதியாரின் நெஞ்சுரத்தைக் கதை கதையாக இன்னமும் சொல்கின்றன. துணைவேந்தர் பலரைத் தன் நெஞ்சத் துணிவால் நடுங்கச் செய்த பெருமை பாரதியார் ஒருவரையே சாரும். அவர் பிடித்திருக்கும் தடி, தடியடிக் காக அல்ல; அது நீதி வழுவாத செங்கோல் ஆகும். அமர் என்ருல் போர்; அரர் என்ருல் வீரர். நாவலர் பாரதியார் ஓர் அமரர்; ஆம். அவர் ஓர் போர் வீரர். தமிழுக்குத் தீமை பயப்போரை இப்போர் வீரர் தாக்கு வார். இவ்வீரர் நூருண்டுகள் வாழ அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பிலும், துணைவேந்தர் சார்பிலும் வாழ்த்துகிறேன்" எனக் கூறினுர்.

அடுத்து, பேராசிரியர் திரு. இலக்கு வனர் அவர்கள் உரையாற்றினுர். அவர்தம் உரையில் "தமிழுக்காகப் பாடுபட்ட மறைமலையடிகளாரின் மறைவை, நாவலர் பாரதியாரவர் களின் நிறைவு ஈடுசெய்து வருகிறது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சிறப்புற்றிருந்த தமிழையும், தமிழகத் தையும், பல நாடுகள் போற்றிப் புகழ்ந்தன. ஆங்கிலம் என்னும் செவிலித்தாய் நுழைந்தபின் அதன் அரவணைப்பிலே பலர் தமிழ்த்தாயை மறக்கலாயினர். இருப்பினும், சொல் லும் திறமையும், செய்யும் செயலும், உரம்பாய்ந்த உள்ளமும், எஃகு உறுதியும் பெற்றிருந்தனர் சிலர். அவர்கள் வாழ்வு சிறக்கவில்லை, எடுத்துக்காட்டு நாவலரே ஆகும். வழக்கறிஞராகப் பணியாற்ருது, தமிழின்பாற் கொண்ட காதலாற் ருன் இன்று ஆளும் அரசவையிலே உயர் பதவியில் வீற்றிருக்க முடிய வில்லை. இல்லையென்ருல் இந்நேரம், டில்லியிலோ, வேற்றிடத்திலோ வீற் றிருப்பார். உண்மையில் இவ்விழா வினைத் தேசியத்தாரே நடத்தியிருக்க வேண்டும். ஆனுல் அவ்வாறு செய் யாததற்குக்காரணம் அவர்களுக்குத் தமிழும் தெரியாது; தமிழ்ப் பற்றும் கிடையாது. தமிழைப் பேச, எண்ண, அங்கு ஆளே கிடையாது. இருக்கும் தமிழையும் தமிழ் நாட்டையும் காப்ப தற்கும் ஒருவரில்லை!

தமிழ் ஆராய்ச்சிபற்றியும் திரு வள்ளுவர்பற்றியும் ஆய்ந்தறிய அர சும், பல்கலைக் கழகங்களும், அதன் துணைவேந்தர்களும் பாரதியாரைத் தமிழ் காவலராக வைத்தல் வேண் டும்.

ஆங்கிலம் பல மொழிகளிலிருந்து கடன் வாங்கப்பட்டு ஆங்கிலமாக இருக்கிறது. ஆனுல் தமிழில் வேண் டிய சொற்கள் இருக்கின்றன. பயன் படுத்த இயலாதபோது வேற்று மொழிச் சொற்களைக் கையாளலாம்.

தமிழுக்கு அணி செய்வன எதுகை மோனை. அழகான பெண்ணைத் திரு மணம் செய்துகொண்டவன், வாழ் வில் எவ்விதம் பூரிப்படைகிருனே அதைப்போலவே அழகு தமிழில் எதுகை, மோனை பேசுவதும் ஆகும் எதுகை, மோனை தெரியாததால் தான் அவர் அவற்றைக் கையாளு பவர்களை எதிர்க்கிருர்கள்

பாரதியார் பல்லாண்டு வாழ வேண்டும் அவர் வாழ்வதால் தமிழ் உயரும்; தமிழ் பொலிவு பெறும்; தமிழ்நாடு சீர்பெறும். அவர் வாழ்ந்து, உரிமைத் தமிழ்நாட்டில் புகழ்பெற்று குடியரசுத் தலைவராக வர வேண்டும் என வாழ்த்துகிறேன்" எனக் கூறினுர்.

முடிவில் நாவலர் பாரதியார் அவர் கள் பாராட்டுதல்களுக்கு நன்றி நவின்ருர் நன்றியுரையில் அவர் கூறி யதாவது: "அன்பானவர்களே, பெரி யோர்களே, சகோதரிகளே - தாய் மார்கள் என்று நான் கூறமாட்டேன். (காரணம் அவருக்கு வயது 80.) உங்கள் வாழ்த்துக்களும் பாராட்டுக் களும் என்னை இன்னும் இளை ஞகவே ஆக்குகின்றன. நானை இன்னும் வாழ விரும்புகிறேன். காரணம், இன்னும் தமிழுக்குத் தொண்டு செய்யவும் தமிழுக்குக் கேடு பயப்பவர்களை விரட்டியடிக்க வும்தான்.

உலகிலே அதிகம் பேர் பேசுவ தாலே ஒரு மொழிக்கு உயர்வு ஏற்படுவதில்லை. ஆங்கிலம் பல அழகைக்கொண்டு நடப்பது; உல கிலே அதிகம் பரவியுள்ளது. அதில் காட்டுமிராண்டித்தனமாக எதையும் மறைப்பதில்லை. ஆனுல் நம்முடைய நாட்டில் வேதம் என்பதை, "திரு மறை" என்று கூறி, வேதத்திற்கு ஒரு மறைவை உண்டாக்கிவிட்டனர்.

'வேதம்' என்பதன் பொருள், "அறிவு". அந்த அறிவானது திரு மறையாக மறைக்கப்பட்டுவிட்டது.

மறைவாக இருப்பது என்ன? "மறை" என்ருல் வெளிக்காட்ட அஞ் சுவது என்று பொருள். எதைமறைக்க வேண்டும்? கொக்கோகத்தை! ஒழுக்கக்கேட்டை! ஏன் நீ வேதத்தை மறைக்க வேண்டும்? அணுகுண்டா அதில் இருக்கிறது? அதில் கடவு ளுக்கு இரண்டு மனைவிமார்! பேரன், பேத்திகள்! லீலைகள்! இவை இருப்ப தால்தானே மறைக்கிருய்! இதற்கு ஏன் திரை போடுகிருய்? 'இப்பேர்ப் பட்ட கடவுளும் இருக்கிருரே!' என்று யாரும் எண்ணிவிடுவார்கள் என்ற எண்ணத்தாலா? இதைக்கேட் டால் நாத்திகஞ? நல்ல வேதத்தில் இவைஇருப்பதில்லை. வா, காட்டுஉன் வேதத்தை! மனிதனைக் கொன்று சாப்பிடவேண்டும் என்று ரிக்வேதம் கூறுகிறது என்பதற்காக நாம் ஏற்றுக்கொள்ளலாமா? எதையும் அறிவோடு அஞ்சாமல் சிந்திக்க வேண்டும். ஆபாசங்களை விலக்கியே வாழவேண்டும்.

தமிழர்கள் எதையும் சிந்திக் காமல் அஞ்சி வாழ்கிருர்கள். இதைக்கண்டு நான் மிகவும் வருந்துகிறேன்.

உண்மை கண்டு வாழ்க

உண்மையை இனிக்கும் வண்ணம் நாம் கூறவேண்டும். அறிவிற்குப் புலப்படும் உண்மைகளை நயம்படத் தெரிந்து பிறருக்குக் கூறவேண்டும். என்றும் உண்மை கண்டே வாழுங் கள். அறிவிற்கு என்றும் மதிப்பளித்து, துணிவோடு அறிவு வழியில் செல்லுங் கள் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். **சிந்தனை செய்பவர் களை நான் நாத்திகர்களாகக் கருதவில்லை.**

தமிழைப்பற்றி நாமே புகழ்வது நல்லதல்ல. மிகப் புதிது ஆங்கிலம். அது நாட்டுப் பற்ருேடு தழுவி நிற்கிறது. சீன மொழி பௌத்தத் தைத் தழுவியிருக்கிறது; வளர்கிறது. ஆனுல் நம்மில் பலர் மொழி வளர்ச் சிக்குப் பாடுபட முன் வராதிருக் கின்றனர். அச்சம், பயம் இவைதான் காரணம், உங்கள் திருமறை விளங் காத காரியங்களை மறைக்கவே பயன்படுகிறது.

சிந்தனை செய்பவனை இழித்தும், பழித்தும் பேசுவது அறிவுடைமையா காது. உள்ளத்தையும், அறிவையும் கடந்த ஒரு நிலை இருக்கிறதே அது தான் கடவுள்! அதை விடுத்து எதை எதையோ கூறி மறைக்கப் பார்ப்பது, அறிவுடைமையாகாது.

கடைசியாக, நீங்கள் எல்லோரும் என்னை வாழ்த்துவது, 'மேலும் தமி ழுக்குத் தொண்டு செய் என்ற அன்புக் கட்டளையாகத்தான் நான் கருதுகிறேன். உங்கள் அன்பு, என்னை மேலும் ஊக்கமடையச் செய் கிறது. அனைவரும் தமிழைக் காக்க வேண்டும்; தமிழ் வாழ வேண்டும் எனக் கூறி வாழ்த்துகிறேன். வணக்கம்."

திருவாளர்கள் ஞா. தேவநேயப் பாவாணர், பூ. ஆலாலசுந்தரனுர், சுந்தரவடிவேலு, பண்டிதவித்துவான் இராம. கோவிந்தசாமி பிள்ளை, அ. மு. பரமசிவானந்தனுர், எம். அருணுசலம் பிள்ளை, திருமதியர் இராசரத்தினம். இராசாமணி, கரந்தைத் தமிழ்சங்கச் சார்பில் மாணவர் - ஆசிரியர்கள், கலைஞர்கள் எம். ஜி. இராமச்சந்தி ரன், எஸ். எஸ். இராசேந்திரன டி. கே. சணமுகம் முதலியோரும் தமிழ் எழுத்தாளர் சங்கம்-சென்னை, டாக்டர் உ. வே. சாமிநைதைய்யர் நூல் நிலையம்-சென்னை முதலியவை யும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தன. நமது ஆசிரியர் கண்ணதாசன் "விழா வெல்க, நாவலர் வாழ்க" என வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

தொகுத்தவர்:
-கருணை

★★★மேலே உள்ள புகைப்படத்தில், நாவலர் அவர்களை, தமிழவேள் பொ. தி. இராசன் அவர்கள் பாராட்டு வதைக் காண்க. நாவலருக்கருகே திருவாளர் சி. இலக்குவனுர் இருக்கின்ருர்.

—5-ம் பக்கத் தொடர்ச்சி—

இங்கு இறையனார் களவியலுரை நடையை எடுத்துக்காட்டியபோது அது நமக்கு இனிக்கவில்லையா? தமிழ்ச் செவி உடையார்க்குக் கட்டாயம் இனித்திருக்கும். (பலத்த கைத்தட்டல்) அது தமிழ் இல்லையா? அந்நடை போன்று நமக்கு எழுத முடியாது என்றால்-எழுதவரவில்லை என்றால், அது உரைநடை அன்று என்று கூறுவது பொருந்தாது."

மேலும் பேராசிரியர் சிதம்பரநாதனார் மிக்க கோபத்தோடும் ஆவேசத்துடனும், "ஓடினாள்; ஓடினாள்; வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்" என்பதை நையாண்டி செய்ததைக் கண்டித்தும், **"மறைமலை அடிகள் தமிழ்-தமிழா?" என்று கேட்கும் தாழ்ந்த நிலையைத் தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த நாடு பொறுத்துக்கொள்ளும்?** என்றும் முகம் சிவக்க, கண்கள் தீப்பொறி பறக்க, உடல் சிலிர்க்க கூறித் தம் பேச்சை முடித்தார்.

பின்னர் எழுத்தாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த விருந்தினை ஒதுக்கித் தள்ளித் தலைவர் கோபத்துடன் சென்றுவிட்டார்கள்.

முடிவாக இந்த எழுத்தாளர் மாநாடு ஒரு வாணிப முறையில் அமைந்திருந்தது. தமிழ் வாழவேண்டும் என்றோ, தமிழன் பிறநாட்டு நல்லறிஞர் கூட்டத்தோடு முந்தி நின்று பெருமைப்பட வேண்டும் என்றோ நினையாது - வரலாற்றை படிக்க மறந்து - திரும்பிப் பார்க்கக் கூட முடியாமல்-உலகம் தோன்றிய நாள் கணக்கிட முடியாதாயின் தமிழ் மொழியும் தோன்றிய நாளைக் கணக்கிடமுடியாத நிலைதான் எனப் பிறமொழி நல்லறிஞர்கள் கூறிய பிறகும் கூட - செத்த மொழியை கட்டி அணைத்து அதனை மீண்டும் கொலுவிருக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ் எழுத்தாளர் சங்கம் என்ற போர்வையில் நாடகம் நடத்திப் பார்த்தார்களே ஒழிய, இவர்கள் உண்மையில் தமிழ் எழுத்தாளர்கள் அல்ல.

இந்த நாடகத்தால் அவர்கள் மொழியின்படி "சபாஷ்" பெறுவதற்குப்பதில் **நீண்ட பகையைத்தேடிக் கொண்டார்கள்.** மேலும் இதில் சிவபாதசுந்தரம் போன்ற விபீடணர்கள் இருப்பதையும் காண முடிந்தது.

இந்த மாநாடு முடிந்ததும் 'நாங்கள்தான் தமிழ் வளர்க்கிறோம்" எனக் கூறும் க. நா. சுப்பிரமணியமும், "சபாஷும், காலரியும்தான் தமிழ் உரைநடை" எனும் சிவபாதசுந்தரமும் அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டு வரவேற்புக் குழுவில் அமைந்திருக்கிறார்கள். அந்த வரவேற்புக் குழு மிக வேடிக்கையாக அமைந்திருக்கிறது. "இந்து"வின் 9-8-59 இதழில் இதுபற்றிய செய்தி வந்துள்ளது. தமிழகத்தில் கூட இருக்கும் அகில இந்திய மாநாட்டு வரவேற்புக் குழுவில் கனம் கல்வி அமைச்சருக்கும், தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் மீ. பா. சோமசுந்தரத்திற்கும் (வித்துவன் பட்டம் பெற்றதால்) இடமில்லை. இந்து இதழுக்கும், சுதேசமித்திரனுக்கும் கொடுக்கப்படும் பெருமை—தக்க இடம் (Representation) மெயில், நவ இந்தியா, தமிழ்நாடு, நம்நாடு, தென்றல், முரசொலி, குமுதம், கல்கி போன்ற இதழ்களுக்கு இல்லவே இல்லை. நல்ல தமிழ் எழுதுகின்ற இதழ்களையும் - தமிழ்மொழி கல்லூரிகளில் இடம் பெற வேண்டும் என்று வாதாடும் கல்வி அமைச்சரையும் புறக்கணித்துள்ளனர். மேலும் சர் பி. டி. இராசன் தலைமை தாங்கும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கும், மற்றும் கரந்தை தமிழ்ச் சங்கத்திற்கும் அனைத்திந்திய எழுத்தாளர்களை வரவேற்கும் பணியில் இடமில்லை.

இந்த வரவேற்புக் குழு யார் அமைத்தது என்றே தெரியவில்லை. இந்தக் குழு பிறமொழி எழுத்தாளர்களை வரவேற்றால் அவர்களுக்குத் தமிழ்நாட்டில் இவர்கள்தான் எழுத்தாளர்கள் என்றும் "சுபதினம், காலரி, சபாஷ், நமஸ்காரம், பரிவர்த்தனை, பரிபூரணம், கோஷ்டி, பிரஜை, அங்குரார்ப்பணம்" முதலியனதான் தமிழ்-எனவும், "ஆஹா! எங்கள் உரைநடையில் உள்ள சரளமான சௌஜன்ய நடையைப் பாருங்கள்" எனக் காட்டி விடுவார்கள். வரலாறு அறியாத சில பிறமொழி எழுத்தாளர்களும் இதுதான் தமிழ் உரை நடை போலும் என்று மிரள ஏதுவாகும். இத்தகைய நாசகால நஞ்சூட்டத் தகுந்த வேலையை ஏனைய ஏடுகளும் கண்டிக்க வேண்டும். யாருக்கோ வந்த விருந்து என்று இருந்துவிடக்கூடாது.

நாம் அனைவரும் ஒன்று கூடிக் கூட்டுறவாக இதனைக் கண்டிக்க வேண்டும். நம்மவர்கள் சிலர் அவர்களுக்குத்தரும் கூட்டுறவுதான் அவர்களைப் பலப்படுத்தவும்-நம்மவர்கள் சிலரை வரவழைத்து நம் எதிரிலேயே நம்மைத் தாக்கி இழிவுபடுத்தும் நிலையை உருவாக்குதற்கும் அவர்களுடைய மண்டை கனம் பெற்றும் வலுப்பெறவும் இருக்கிறது. அம்மாஞ்சித் தமிழும் அம்மாமித் தமிழும்தான் தமிழ் என்றும், அதுதான் இலக்கியம் என்றும் "அந்த இலக்கியத்திற்குத்தான் புலவர்கள் இலக்கணம் காண வேண்டும்" என்று கூறுகின்ற துணிச்சல் தமிழ்ப் புலவர்களை வைத்துக்கொண்டே ஏற்பட்டு இருக்கிறது என்றால், இந்தப் போக்கினை வளரவிடக் கூடாது. அவர்களின் ஏடுகளுக்கும் தமிழ் அறிஞர்கள் ஒத்துழைக்கக் கூடாது.

தமிழுக்கென்று தனிப் பண்பும், தமிழனுக்கென்று தனிக் குணமும் பண்பும் உண்டு - தமிழை உண்மையாக ஏற்கெனவே வளர்த்துவிட்டார்கள் வள்ளுவரும், சாத்தனாரும், இளங்கோவும், நக்கீரரும். அதனை இவர்கள் அறியாது தமிழ் வளர்ப்பதாக, தமிழரிடை தங்கள் பெயரைப் பரவச் செய்கிறார்கள். அல்லது அவர்கள் வளர்த்த தமிழை கொலை செய்யும் சூழ்ச்சியில் தமிழ் எழுத்தாளர் சங்கப் போர்வையில் நுழைந்துள்ளார்கள். தமிழர்கள் - தமிழ் ஆசிரியர்கள் எச்சரிக்கையாக இருத்தல் நலம். இவர்கள் தங்களைத் தாங்களே தங்கள் பாரதி இதழில் "பாஷாசார்யர்கள்" என்று பெயரிட்டு இறும்பூது எய்துகிறார்கள். இந்தக் "காலரி"கள் ஒருநாள்-கால வெள்ளத்தில்-இடம் தெரியாமல்-உலக வழக்கு அழிந்து ஒழிந்துசிதைந்து இழிவார்கள் என்பது கண்கூடு; உண்மையும்கூட. இது வரலாறு கூறும் உண்மை; நான் மட்டும் கூறவில்லை.

-ந. இனியன்

ராஜபார்லி பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
ஏஜ:உ. சங்குபிள்ளை ரா. 15, திண்டுக்கல்ரோடு, மதுரை.



தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளிலும், தபால் மூலமும் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம்

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே, மண்ணடி, சென்னை - 1.

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாகத் திருத்தமான முறையில்

இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்திசெய்து **24-8-59-ந் தேதி** வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள் **25-8-59-ந் தேதி** முதற்கொண்டு தொடந்து அனுப்பப்பட்டு, கற்கும்போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்-சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவனவாக இருக்கும்" எனில், மிகைப்படுத்திச் சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு: (1) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (2) ஆதாரப்பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாம் (3) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பிரிவு பிரிவாகப் பயிற்சியளிக்கப்படும். (4) இத்தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விவரங்களையும் எட்டு நயே பைசே (8 புதிய காசுகள்) தபால் பில்லை அனுப்பிப் பெறுக.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில் உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

பெண் உள்ளம்

“என் மனைவிக்கு மீண்டும் பைத்தியம் பிடித்துவிட்டது. மறுபடியும் அவளைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறேன். மற்ற விவரங்களை நேரில் கூறுகிறேன்...” என்னால் மேற்கொண்டு படிக்கவில்லை. நண்பர் மணிவண்ணன் தம் மனைவியை எத்தனை துயரப்பட்டு, துன்பப்பட்டு, பேணி வளர்த்து, கடனால் துரத்தப்பட்டும் கவலையால் தொடரப்பட்டும்-மருந்துகள் பழங்கள் முதலியன வாங்கிக்கொடுத்து, வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்தார் என்பதை நான் நன்கறிவேன்; அவற்றை எல்லாம் தொகுத்து எழுதினால் ஒரு தொடர்கதையையே எழுதலாம். எளிய கணக்காயரான மணிவண்ணன் தம் அளவுக்கு மீறியே கடன் வாங்கித் தம் மனைவியின் பைத்தியத்தை நீக்க முயன்றார்... இந்த நிலையில் அவரது மனைவிக்கு மீண்டும் பைத்தியம் என்றால்என்னால் நம்பமுடியவில்லை. எதனால் இது மீண்டும் ஏற்பட்டது என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை. ஏதாவது ஓர் அதிர்ச்சி அவளுக்கு ஏற்பட்டிருக்கவேண்டும். அதனால் அவளுக்கு மீண்டும் பைத்தியம் ஏற்பட்டிருக்கவேண்டும் என்பது மட்டும் நிச்சயமாகத் தெரிந்தது. அது என்ன என்பதைத் தெரிந்துகொள்ள ஆவல் மிகுதியால் நான் உந்தப்பட்டபோதிலும் நண்பரைக் காண முடியவில்லை. எனக்கோ வேலை மிகுதி; அவரைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலோ கொள்ளை கொள்ளையாக இருக்கிறது இந்த நிலையில் நான் தவியாய்த் தவித்தேன்.

எதிர்பாராத விதமாக ஒருநாள் நண்பரைச் சந்தித்தேன். கவலையால் பெரிதும் வாட்டப்பட்டிருந்தஅவரிடம் எப்படி எடுத்த எடுப்பிலே கேட்பது என்று புரியாமல் தவித்துக்கொண்டிருந்தேன். பிறகு ஒருவாறு சமாளித்துக்கொண்டு, “எப்படி நலமெல்லாம்? தங்கள் மனைவியார் உடல் நலம் எப்படி?” என்று கேட்டேன் “எல்லாம் நலந்தான்,” என்று வெறுப்புடன் கூறினார். நான் மேலும் பேச விரும்பவில்லை. சிறிதுநேரம் கழித்து “என் கடிதம் வந்துசேர்ந்ததல்லவா? அதில் என் மனைவிக்கு இரண்டாம் முறையும் பைத்தியம் பிடித்துவிட்டது என்று எழுதியிருந்தேனே?” என்றார். எத்தனையோ கவலைகளுக்கு இடையில், எனக்கு எழுதிய கடிதத்தில் என்ன எழுதினோம் என்பதைக்கூட மறந்துவிட்டார் போலும்.

“ஆம்! உங்கள் கடிதம் கிடைத்தது. ஆனால் மற்ற விவரங்களைப் பிறகு கூறுவதாக எழுதியிருந்தீர்கள்...” என்றேன்.

“ஓகோ! அப்படியா! சரி. இப்போதே கூறுகிறேன் கூறினால்தான் என் மனச்சுமையும் அடங்கும்...” என்று கூறித் தன் கதையை உடனே கூறத் தொடங்கினார். அவர் கூறிய கதை பின்வருமாறு :

★

ஆஸ்பத்திரியிலிருந்து . விடுதலை பெற்றுக்கொண்ட பிறகு அவருடைய மனைவியை வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்தார். வீட்டில் அவர்கள் இருவரும் வந்து சேர்ந்ததும் மிகுந்த ஆதுரத்துடனும், அன்புடனும் ஒரு பெண் வரவேற்றாள். வீடு மிகுந்த அழகுடனும், சுத்தமாகவும் வைக்கப்பட்டிருந்தது. நண்பரின் மனைவிக்கு-கோமளம் அவள் பெயர் இது ஆச்சரியமாக இருந்தது. வீடு அழகற்றுக்கிடக்கும், அலங்கோலமாக இருக்கும்; தான் வந்துதான் வீட்டைச்சீர்திருத்த வேண்டியிருக்கும்; இதனால் தன்னுடைய பெருமை ஒருபடி உயரும்; கணவனுக்கும் தனக்கும் இதனால் துண்டிக்கமுடியாத தொடர்பு ஒன்று ஏற்படும் என்றெல்லாம் அவள் நினைத்திருக்க வேண்டும். வீட்டிற்கு வந்து சேர்ந்ததும் மணிவண்ணனை அன்புடன் வரவேற்று உபசரித்து, அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து, அவர் அலுவலகம் செல்வதற்குத் தேவையான உடுப்புக்களை எடுத்து வைத்து, சாப்பாடு போட்டு அலுவலகம் அனுப்பி வைத்தாள் அந்தப் பெண்! அவள்மகிழ்ச்சி முகத்தில் பிரதிபலிக்கிறதே! அவள் முகத்தில்தான் எத்தனை அன்பு? “அவள் இவரை...?” என்று கோமளம் சந்தேகப்பட்டதில் தவறில்லை.

பருவத்தின் தலைவாயிலில் நிற்கும் பெண்; பார்த்தால் பசிதீரும் அழகு; பட்டுப் புடவை கட்டியதில்லை அவள்; எளிய வாயில் புடவைதான் கட்டுவாள்; அதுவே போதும் அவள் அழகைப் பன்மடங்கு எடுத்துக் காட்ட. கிறுகிறுக்க வைக்கும் அழகுடையாள்; கிஞ்சித்தும்களங்கமின்றிச் சிரிக்கச் சிரிக்கப் பேசும் செந்தமிழ்த் தேன் மொழியாள்; அப்படிப்பட்ட பெண்-செந்தாமரை அவள் பெயர்-தன் கணவனைத் தான் இல்லாத காலத்தில் என்னென்ன செய்து வசப்படுத்திக்கொண்டாளோ என்று கோமளம் எண்ணியதில் தவறில்லை. அறுசுவை உண்டி செய்து மகிழ்வித்து மையல் ஊட்டினாளோ? சொற்சுவை சொட்டப் பேசிக் காதலை வளர்த்தாளோ? கற்கண்டின் இனிமை கலந்த கன்னித் தமிழில் காதல் கதை கூறிக் காமம் ஊட்டினாளோ? இவ்வாறெல்லாம் கோமளம் எண்ணி எண்ணி வருந்தினாள். வீட்டிற்குள் வந்து சேர்ந்த சில மணி நேரத்திற்கெல்லாம் அவளுக்குத் தெரிந்துவிட்டது இவர்கள் காதல் நாடகம் ஏன் வீடு வந்தோம், ஏன் இதைப் பார்க்க நேர்ந்தது-என்றுகூட அவள் எண்ணினாள். ஒரு பெண் உலகத்தில் எதையும் தாங்கிக் கொள்வாள்; ஆனால் தன் கணவனின் அன்பை வேறொரு பெண் பறித்துக்கொண்டாள் என்றாலோ, பறித்துக்கொள்ளப் பார்க்கிறாள் என்றாலோ அதை உண்மையான ஒரு பெண்-அதாவது கணவனிடத்தில் அன்பு செலுத்தும் கற்புடைய பெண் - தாங்கமாட்டாள். அந்த நிலையில்தான் கோமளம் அவதிப்பட்டாள்.

செந்தாமரை, . மணிவண்ணனின் அத்தை மகள் ஆவாள். சிறு வயது முதலே அவரது ஆதரவில் வளர்ந்தவள். தாய், தந்தையற்ற செந்தாமரையை வளர்க்கும் பொறுப்பு மணிவண்ணனைச் சேர்ந்துவிட்டது. துன்பத்தோடு துன்பமாக, தான் சாப்பிடும் கஞ்சியோ, கூழோ, அதில் பாதியைப் பங்கிட்டுக் கொடுத்து, செந்தாமரையை வளர்த்து வந்தான். அவளும் பொறுப்புணர்ந்த பெண். பெண்கள் எவ்வளவு சிறு வயதானாலும், விரைவில் பொறுப்புணர்ந்து கொள்வார்கள்! ஆண்கள் அவ்வளவு விரைவில் பொறுப்புணர்வதில்லை! செந்தாமரை இதுவாவது கிடைத்ததே என்று எண்ணி மகிழ்ந்து கிடைத்ததோடு திருப்தி அடைவாள். ஏழ்மையிலே உழன்றாலும் எழில் கூட்டத் தவறவில்லை இயற்கை. செயற்கை ஒப்பனைகளால், சில மணி நேரங்கள் செலவழித்த பிறகும் பெறமுடியாத அழகை எந்தவித ஒப்பனைப் பொருள்களும் இல்லாமல் சில நிமிட நேரத்தில் செந்தாமரை பெற்றுவிடுவாள்.

கோமளத்திற்கு வேண்டிய உணவு வகைகளை எல்லாம் முதல் நாளே மணிவண்ணனிடம் கேட்டுத்தெரிந்துகொண்டதால், அவைகளை உடனடியாகச் செய்துகொண்டு வந்து அவளிடம் கொடுத்தாள். கோமளத்திற்கு வியப்பு மேலிட்டது. “இந்த உணவுதான் எனக்குப் பிடிக்கும் என்று உனக்கு எப்படித் தெரியும்?” என்று முகத்தைச் சுளித்துக் கொண்டே கேட்டாள். “அவர் கூறினாரே!” என்று எல்லாப் பல்லும் தெரியக் கூறினாள் தாமரை. “அவரா?” என்று ஏளனமாகக் கேட்ட கோமளம், “சரி, வைத்துவிட்டுப்போ!” என்று சொல்லி, தாமரையைப் பார்க்கக் கூசியவளாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். கோமளம் வீட்டைவிட்டு வெளியேறி ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது செந்தாமரை வயது வராத ஒரு பெண்ணாக இருந்தாள். கோமளம் திரும்பவும் வீடு வந்தபோது செந்தாமரை, முற்றிலும் மாறுபட்ட வளர்ச்சியுற்ற ஒரு பருவப் பெண்ணாகக் காட்சியளித்தாள். பெண்கள் இந்தப் பருவத்தில் தானே அடையாளம் கண்டுபிடிக்கமுடியாத அளவு வளர்ச்சி பெறுகிறார்கள்!

கோமளம் அவள் கொண்டுவந்த உணவைத் தொடவில்லை; செந்தாமரை சிறிதுநேரம் கழித்துச் சாப்பிடுவாள் என்று சும்மா இருந்துவிட்டாள். நேரம் சென்றது; அவள் சாப்பிடும் வழியாகக் காணோம். அன்புள்ளம் கொண்ட செந்தாமரை நேரே கோமளத்திடம் சென்று, ‘ஏன் சாப்பிடவில்லையோ?” என்று பரிவோடு கேட்டாள். “எல்லாம் எனக்குத் தெரியும்? நீ ஒன்றும் சொல்ல வேண்டாம்! இந்த உபசரிப்பு எனக்குத் தேவையில்லை; அவருக்குத் தேவை!” என்று அழுத்திக் கூறினாள்! மேலும் அவளிடம் பேசப் பிடிக்காததுபோல் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். கோமளத்தின் உள்ளம் செந்தாமரைக்கு இப்போது புரிந்துவிட்டது! ஐயோ! இதென்ன விந்தை!

“கட்டிய மனைவிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது! உற்றாரின் உதவியில்லாமல், உறவினரின் துணையில்லாமல் ஒருவர் வாழ்கின்றாரே, என்று நினைத்து அவருக்கு வேண்டிய பணிவிடைகளையும் உபசரிப்பையும் செய்தால், அதை இந்தமாதிரியா எண்ணுவார்கள்? களங்கமற்றுத்தான் நான் அவரிடம் பழகினேன்; என்னைவிடக் களங்கம் இல்லாமல்தான் அவரும் என்னிடம் பழகினார். அதைக் கோமளம் அறியமாட்டாள். பெண்கள் சந்தேகப் பிறவிகள் என்பது உண்மையாய்விட்டதே! நான்என்ன கூறி அவளது சந்தேகத்தைப் போக்குவேன்! ஓர் ஆணும் ஒரு பெண்ணும் களங்கமற்றுச் சிரித்துப் பேசினால் அவர்களிடையே காதல் நிலவுகிறது என்றுதான் எடை போடுகிறது இன்றைய உலகம்! காதலர்கள்தான் சிரித்துப் பேசுவார்களா? மற்றவர்கள் யாரும் களங்கமில்லாமல் சிரித்துப் பேச இந்த உலகம் அனுமதிக்காதா?’ என்று இவ்வாறெல்லாம் எண்ணிச் செந்தாமரை சிந்தை நொந்தாள் மணிவண்ணன் வந்த பிறகு நடந்ததைக் கூறி, தான் எங்காவது வெளியூருக்குச் சென்றுவிட வேண்டுமென்று முடிவு செய்துகொண்டாள்.

மணிவண்ணன் வீட்டிற்கு வந்தார். செந்தாமரை நடந்ததைச் சிறிதும் நினையாமல் அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்தாள். இவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த கோமளத்திற்கு நாம் ஏசியும் இவள் அவருக்குப் பணிவிடைகள் செய்கிறாளே, அவரிடம் எவ்வளவு அன்பாயிருக்க வேண்டும் என்று எண்ணினாள். ஒரு பெண்ணின் உள்ளத்தில் சந்தேகம் புகுந்துவிட்டால் அதை விரட்டுவது மிகவும் கடினமாகும்.

சாப்பிட்டான பிறகு மணிவண்ணன் மனைவியிடம் சென்று “சாப்பிட்டியா? எப்படியிருக்கிறது உடல்நிலை?” என்றெல்லாம் மிகவும் ஆவலுடன் கேட்டார். முகத்தைச் சுளித்துக் கொண்டு கோமளம் பதில் சொல்லாமல் படுக்கையில் கிடந்தாள். “கோமளம்! உன்னைத்தான் கேட்கிறேன்!” என்று ஆதுரத்தோடு கேட்டார். “என்னை ஒன்றும் கேட்க வேண்டாம்! அவளைக் கேளுங்கள்!” என்றாள் எரிச்சலுடன். மணிவண்ணனுக்கு விஷயம் ஒன்றும் புரியவில்லை. இவர்களுக்குள் நடந்த பூசல் அவருக்கு எப்படித் தெரியும்! சிறிது நேரம் கழித்து அவளிடம் பேசலாம் என்று நினைத்து அறையின் ஓரத்தில் இருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். தன் அருகில் அமர்ந்து தன்னைத் தூக்கி உட்காரவைத்து, ஏன் சாப்பிடவில்லை,என்ன கோபம் என்றெல்லாம் கேட்பார் என்றுதான் கோமளம் நினைத்தாள். ஆனால் அவள் நினைத்ததற்கு மாறாக, அவர் தூர உட்கார்ந்து கொண்டார். அவர் தன்னருகே கூட உட்கார விரும்பவில்லை என்று அவள் மனத்திற்குள் நினைத்துப்

— அடுத்த பக்கம் —

கி. மனோகரன்,
சி. பி. சிற்றரசு
தீட்டிய
சுவையான கட்டுரைகளுடன்
ஆகஸ்ட் இதழ் வெளிவந்து விட்டது!

செப்டம்பர் இதழ் “அன்னை” யின் சிறப்புமலராகப் பவனி வர விருக்கின்றது.

தேன் சுவைக்கும் மகளிர் திங்கள் இதழ்!

“அன்னை”

ஆசிரியர் :
டாக்டர் சத்தியவாணிமுத்து
எம். எல். ஏ.

விற்பனையாளர் இல்லாத ஊர்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை!

★

விவரங்கட்கு :
“அன்னை”
24-C, ஹைதரித் தோட்டம்,
கிருஷ்ணதாஸ் ரோடு,
சென்னை-12.

—முன் பக்கத் தொடர்ச்சி—

பொருமினுள். "கோமளம்" என்று இரண்டு, மூன்று முறை குரல் கொடுத்துப் பார்த்தார்; பதில் இல்லை. பேசாமல் எழுந்து தன் அறைக்குச் சென்றுவிட்டார். கோமளத்தின் இதயம் சுக்கு நூருக உடைந்துவிட்டது; அழுதபடியே அன்றைய இரவைக் கழித்தாள்.

பொழுதுவிடிந்தது. அவளுக்கு வேண்டிய காப்பி, ரொட்டி முதலிய உணவு தயாரித்துக் கொண்டுவந்து வைத்தாள் செந்தாமரை. பின்னுலேயே மணிவண்ணன் வந்தார். "ஏன் சாப்பிடமாட்டேன் என்கிருய்! சாப்பிட்டால்தானே உடம்பு தேறும்?" என்று கோபமாகவும், ஆதரவாகவும் கேட்டார். "என் உடம்பு தேறித்தான் என்ன பயன் ஏற்படப் போகிறது?" என்று வெறுப்புடன் பதில் அளித்தாள். "நீ என்னதான் சொல்கிருய்? உன் மனத்தில் என்னதான் இருக்கிறது?" என்று முன்னைவிட அதிகக் கோபத்துடன் கேட்டார். "அதை வேறு நான் வாய் திறந்து சொல்ல வேண்டுமா?" என்று பதில் சொன்னுள் கோமளம். "இதென்ன, பெரிய வம்பாகப் போய்விட்டதே!" என்று அலுத்துக் கொண்டார், மணிவண்ணன். "வம்பு ஒன்றும் இல்லை. அவளைக் கல்யாணம் செய்துகொள்ளுங்கள். வம்பெல்லாம் ஒழிந்துவிடும்" என்ருள் கோமளம். இடிவிழுந்தது போலாயிற்று மணிவண்ணனுக்கு. இப்போதுதான் அவருக்கு விஷயங்கள் விளங்கலாயின. செந்தாமரை தனக்கு அன்பான மனைவியைவிட அதிகமான உபசரணைகள் செய்து பணிவிடைகள் புரிவதைக் கண்ட கோமளத்தின் உள்ளம் இதை விபரீதமாகக்கற்பனை செய்திருக்க வேண்டும். ஆனல்...

கோமளத்திற்காக-ஓர் ஆண்டுக் காலம் தான் ஆஸ்பத்திரிக்கும் அலுவலகத்திற்கும் வீட்டிற்கும் இடையில் அலைந்தபோது-தனக்கு அன்பான மனைவியைவிடப் பன்மடங்கு அதிகமான பணிவிடைகள் செய்து, தன்னை அறுசுவை உணவாலும், அன்பான பேச்சாலும் பேணிவளர்த்த செந்தாமரையின் நட்பை உதறித் தள்ளுவதா? அன்பிற்கே பொருளாக விளங்கிய அந்த உள்ளத்தை உதறிவிடுவதா? பேதை உள்ளம் கொண்ட அக்கோதையின் மெல்லிய இதயத்தைக் கசக்கி எறிந்துவிடுவதா? அந்த ஓர் ஆண்டில் செந்தாமரையின் அன்புமட்டும் இல்லாதிருந்தால், தானும் ஒரு பைத்தியக்காரனுக மாறி, கோமளத்தின் பக்கத்திலேயே படுத்திருக்க வேண்டியதுதான்! இதை அவள் அறியமாட்டாள்!

கோமளம் ஓர் ஆண்டுக்காலம் ஆஸ்பத்திரியிலிருந்து விடுதலை பெற்று வந்ததால், அவள் எண்ணத்தில், பேச்சில், மூச்சில், கண்களில் காதல் தீ கொழுந்துவிட்டெரிந்தது. விரததாபத்தால் அவள் வெதும்பிப் போனுள். கணவனின் அணைப்பை அனுபவித்து, இன்பப் பேச்சை அனுபவித்து ஓர் ஆண்டிற்கு மேலாகிவிட்டது. அவள் துடித்தாள்; தவித்தாள். மணிவண்ணனே அவளிடம் அன்பாகப் பேசுகிருர்; ஆதரவாகக் கேள்விகள் கேட்கிருர்; ஆனல்... ஆனல்.... கோமளம் வேண்டுவது அவை அல்லவே! அவர் முகத்தில் காதல் பார்வையே காணேம்! ஆம்! அவர் காதல் எல்லாம் தாமரையிடம் இருக்கும்போது தன் மீது எப்படிக் காதலைச்செலுத்தமுடியும்? கோமளம் தன் முகத்தை ஒருமுறை கண்ணுடியில் பார்த்துக்கொண்டாள். "பார்வையில் பழுதா? எண்ணப் பழுதுறு நினைவா? காட்சிக்கோவையில் கனவா? இந்தக் கோதை யார்? அவளே தானு?" என்று முன்னர் ஒருநாள் படித்த கவிஞர் ஒருவரின் பாடல் நினைவுக்கு வந்தது. ஆ! தான் கோமளம்தானு என்று அவளுக்கே சந்தேகம் வந்துவிட்டது. சுருக்கம் விழுந்த கன்னங்களும், உள்ளே போய் ஒளிந்துவிட்ட கண்களும், ஒட்டி உலர்ந்த உதடுகளும், நரையை எட்டிப் பிடிக்கும் தலைமயிரும்...எங்கே? "செம்பருத்திப் பூப்போல உள்ளங்கையும், செங்காந்தள்போல் விரலும்" எங்கே? "மின்வெட்டுக் கண்கட்ட மேவினுற்போல் மென்பட்டு"ப் பாதங்கள் எங்கே? பொன்கட்டிச் சிலைபோன்ற உடல் எங்கே? "சிலையோடும் சமமாக விளையாடும் பருவம்" எங்கே? "சிறுவானப் பிறைமீதில் அலைமோதும் அழகு" எங்கே? எங்கே? கோமளம் உள்ளம் கொதித்தது. இனி தன் அழகு மீள்வதெப்போது? தன் கணவனை-கணவனின் அன்பை அடைவதெப்போது? இதை நினைத்த போது கோமளத்திற்குப் பைத்தியம் பிடித்துவிடும்போலிருந்தது!

செந்தாமரையின் அழகு முகம், அன்புப் பேச்சு, தன் கணவரைக் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை. இனி, தன் வாழ்வு முடிந்த தொடர் கதைதான்; அது இனி, தொடராது என்று முடிவு செய்துகொண்டாள். அவள் நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. பெண்களிடம் அழகு இருக்கும் வரைதான் ஆடவர் நெருங்குவர் போலும்!

இந்த எண்ணத்தில் கோமளம் ஆழ்ந்து கிடந்தபோது, ஒரு நாள் வழக்கம்போல் மணிவண்ணன் தன் மனைவியைச் சாப்பிட்டாயா, எப்படியிருக்கிறது உடல் நிலை? என்று கேட்டாள் கோமளம் பதில் சொல்லாமல் இருந்ததால் சிறிது நேரம் அங்கேயே நின்றுவிட்டுப் போய்விடுவான். ஆனல் அவளோ துடுக்காக "உங்கள் மனைவியைக் கேளுங்கள்" என்ருள். "என் மனைவி நீதானே!" என்ருர் மணி. "நானு! நானல்ல! அந்த நிலையில் இப்போது இருக்கிருளே, அவளைக் கேட்டுப் பாருங்கள்! சௌக்கியம்தானு என்று! என்னை ஏன் கேட்கிறீர்கள்?" என்ருள் கேலியாக. "செந்தாமரையையா அப்படிச் சொல்கிருய்?" என்ருர் மணி. "ஆமாம்! கல்யாணம் பண்ணிக்கொள்ள நான் தடையாக இருக்கிறேனு?" என்ருள் கோமளம். மணிக்கு ஆத்திரம் வந்துவிட்டது. பளாரென்று கன்னத்தில் அறைந்து "நான் அவளைக் கல்யாணம் செய்துகொள்ள நினைத்திருந்தால், உன்னை ஒரு வருடத்திற்கு முன்னுலேயே மணவிலக்குச் செய்துவிட்டு, வாழ்க்கைப் பணம் கொடுத்துஅவளைத்திருமணம்செய்து கொண்டிருப்பேனே!" என்ருர். தன் ஆத்திரம் முழுவதையும் சேர்த்துக் கொண்டு அவர் கோபத்தில் பளாரென்று அறைந்ததால், கோமளம்-ஏற்கெனவே பலவீனமான உடல் நிலையில் இருந்தவள் - மூர்ச்சித்து விழுந்தாள்; அதிர்ச்சியால் தாக்குண்ட அவள் தன்நினைவே பெறவில்லை; சித்தம் மாறிவிட்டது. பேச்சு சரியாக வரவில்லை. பழையபடி பித்தம் கொண்டவளானுள்.

அமைதியான உள்ளம் கொண்ட மணிவண்ணனைப் போன்ற ஒருவர் கூடக் கோபம் கொள்ளுமளவிற்குக் கோமளம் அதிகமாய்ப் பேசினுள், யாகாவாராயினும் நாகாக்க என்பதையும் மறந்து. மணிவண்ணன் ஆத்திரமடைந்து தன் மனைவியை அறைந்துவிட்டார்; அதிர்ச்சியால் அவள் மீண்டும் பைத்தியமடைந்தாள்.

நண்பர் கதையை முடித்தார். கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டே, "செந்தாமரைக்குத் திருமணம் செய்துவைக்க ஏற்பாடுகள் செய்துவந்தேன்; அது கோமளத்திற்குத் தெரியாது. திடீரென்று ஒரு நாள் அவளிடம் கூறி அவளை ஆச்சரயத்தில் ஆழ்த்தவேண்டும் என்று நினைத்திருந்தேன்.....ஆனல் அது வேறு விதமாக மாறிவிட்டது.. செந்தாமரைக்குத் திருமணம் செய்ய இப்போது தீவிரமாக ஏற்பாடுகள் செய்துவருகிறேன். அவள் திருமணமாகி வீட்டைவிட்டுப் போனதும், சில மாதங்களில் கோமளம் பழைய நிலைமை அடைந்து வீடு திரும்புவாள். அப்போது அவள் மகிழ்ச்சியுடன் நடந்துகொள்வாள். ஏனெனில் வீட்டில் செந்தாமரை இருக்கமாட்டாள் அல்லவா? பெண்கள் சந்தேகப் பிறவிகள் அல்லவா?" என்ருர் மணிவண்ணன்.

பெண் உள்ளத்தைத் தக்கவாறு புரிந்துகொண்டவன் தான் வாழ்க்கையில் வெற்றி பெறமுடியும்; மணிவண்ணன் முதலில் அதைப் புரிந்துகொள்ளவில்லை; பிறகுதான் புரிந்துகொண்டார். அவர் மனைவி பைத்தியம் தெளியப்பெற்று மீண்டும் வீட்டிற்கு வந்தால், நிச்சயமாக இருவரும் அன்புடன் வாழ்வர் என்பது மட்டும் உறுதி.

-நா. சகந்நாதன், எம். ஏ.

★ ★

—4-ம் பக்கத் தொடர்ச்சி—

கையாளட்டும். எந்த நடை வேண்டுமானுலும் எழுதட்டும். அது அவரவர் விருப்பம், ஆற்றல், நிலை, தரம் ஆய இவற்றைப் பொறுத்தது. மக்கள், அல்லது காலம்தான் அவற்றுக்குத் தீர்ப்பளிக்க வேண்டும். ஆனல் தாங்கள் எழுதும் நடைதான் சிறந்த நடை என்றும், அதுவே தமிழை வளர்க்கின்றது என்றும், அதனை விரும்பாதவர்கள் குறுகிய உளப் பாங்கும் தமிழ் வெறியுங் கொண்டவர்கள் என்றும் பிதற்றித் திரிவது மிக மிக மடமையும், ஆணவமும் ஆகும்.

மொழியை வளர்ப்பவர்கள். பழுதறக் கற்றுணர்ந்த புலவர்களே-மொழிப் புலவர்களே.

இத்தகு புலவர்களால் இலக்கியம் வளரவில்லையாம்; உரை நடை வளரவில்லையாம்! இது, தங்களைப் பெரிய கலைஞர்கள் (சிருஷ்டிகர்த்தாக்கள்!) என்று நினைத்துக்கொண்டிருக்கும் கூற்று! இது. எந்த அளவுக்கு, உண்மை என்பதிருக்கட்டும்; ஒன்று மட்டும் உறுதி! இப்படிக் கூறுகின்ற இத்தகு கலைஞர்களால் என்றும் மொழி வளரவில்லை!

மொழியை வளர்ப்பதும் வளப்படுத்துவதும் மொழி அறிந்த கலைஞர்களால்தான் முடியும். தமிழ்ப் புலவர்கட்கும் இலக்கியப் படைப்புக்கும் (அதாவது தமிழ் உரை நடைக்கும்!) தொடர்பில்லை என்று கூறுவார்களானுல், இந்த இலக்கியப் படைப்பாளர்கட்கு மொழி வளர்ச்சியைப் பற்றிப் பேச என்ன உரிமை இருக்கின்றது என்று கேட்கின்றேன்.

எந்தத் தமிழ்ப் புலவரும் இன்று இலக்கியத்தைக் கெடுத்துவிடவில்லை. ஆனல் தமிழ் எழுத்தாளர்கள் என்று கூறிக்கொள்ளும் ஒரு சிலர் தாம், இன்று தமிழ்மொழிக்குக் கேடு செய்து வருகின்ருர்கள், என்று அழுத்தமாகக் கூறமுடியும்.

எழுத்தாளர்கள் ஆயிரம் படைப்பாற்றல் பெற்றவர்களாகத்தான் இருக்கட்டும்; மொழி வரம்புக்குள் நின்றுதான் இலக்கியத்தைப்படைக்க வேண்டுமேயன்றி, மொழி மரபை அறியாமலோ, மொழி வரம்புக்குள் நிற்கும் ஆற்றல் இல்லாமலோ, மொழியைச் சிதைப்பதற்கு அவர்கட்கு என்ன உரிமை இருக்கின்றது என்று நான் கேட்கின்றேன்.

நன்ருகப் பந்தாடத் தெரிந்தவன் ஆடலரங்கின் வரம்புகளையும் விதிமுறைகளையும் குறைகூறமாட்டான். ஆடத் தெரியாதவனே, அவை பந்தாட்டத்துக்குத் தடைபுரிவன என்றும், பந்தாட்ட வளர்ச்சியைக் கெடுப்பன என்றும் கூறுவான்.

மொழிமரபு என்ன என்றே அறியாத சில எழுத்தாளர்கள் தமிழ் நடையை வளர்க்கத் தொடங்குகின்ருர்கள். என்ன கொடுமை! அவாகள் மொழிநூல் அறிந்த உயர் பெரும் புலவர்களை, மொழிக்காகத் தங்கள் வாழ்வையே செலவிட்ட தமிழ்ப்பெருந் தலைவர்களைக் குறையும்கூறுகின்ருர்கள். என்ன வேதனை!

நடையில் உயிர்த்துடிப்பு (ஜீவ சக்தி!) மட்டும் இருந்தால் போதாது. உயிர்தான் தலையாயது என்று ஒப்புக்கொள்வோம். அதற்காகப் பிற கூறுபாடுகளை அடியோடு ஒதுக்கிவிடுவதா? உயிர் உள்ள குழந்தைதான். ஆனல் நொண்டியாகவோ குருடாகவோ இருந்தால் சிறப்பாகுமா?

எழுத்தாளனுக்கு மொழி அறிவு வேண்டும் என்பது பற்றிப் பேசவே தேவையில்லை. அது மிக மிக அடிப்படை. பொதுவான கலைஞர் எப்படி வேண்டுமானுலும் இருக்கட்டும். ஆனல் சிறந்த கலைஞராக, காலத்தால் மதிக்கப்படும் கலைஞராக வேண்டுமானல் அவர்கள் தங்கள் கலை நுணுக்கம் முழுவதும் அறிந்தவர்களாகத் தாம் இருத்தல் வேண்டும். மேனுட்டின் சிறந்த கலைஞர்கள் இதற்குச் சான்று.

ஏனெனில் மொழி அறிவு என்பது, எழுத்துக் கலையின் ஒரு நுணுக்கமே ஆகும் ஏதோ தனியான ஒருபுலமை அல்ல.

ஓவியக் கலைஞர்கள் ஐந்தாறு ஆண்டுகள் பயில்கின்ருர்கள். நிறம் பற்றியும், ஒளிபற்றியும், நிழல்பற்றியும், இடம்பற்றியும் எத்தனையோ நுணுக்கங்கள் தெரிந்தபின்னர்தான் அவர்கள் சிறந்த கலைஞர்கள் ஆக முடிகின்றது. ஆனல் ஒற்றெழுத்தும் குற்றியலுகரமும் அறியாதவர்கள்—தொல்காப்பியமும் நன்னூலும் பெயர் மட்டுமே தெரிந்திருப்பவர்கள் "**சிறந்த சிறுகதை எழுத்தாளர்**"களாக ஆகிவிடுவது தமிழகத்தின் விந்தையா - வேதனையா என்றுதான் புரியவில்லை.

தமிழ் எழுத்தாளன் என்ருல், தமிழறிவு குறைந்திருந்தாலும், தமிழ்ப் பற்ருவதுசிறிதுவேண்டும். "மொழி,- நடை - எப்படி வேண்டுமானுலும் இருக்கட்டும், எனது 'படைப்புத்'தான் எனக்குப் பெரிது, எச்சொல்லும் கருத்தை வெளிப்படுத்துமானுல் நல்ல சொல்லே" என்பாராயின், சரி அவ்வாறே செய்யட்டும். அது அவர்கள் விருப்பம். ஒரு பெரியார் என்னிடம் குறிப்பிட்டது போன்று, "கணவன்தான் வேண்டும் என்பதல்ல. யாராயிருந்தாலும் சரி, எத்தனை மனிதராயினுஞ் சரி, 'குழந்தைதான் பெரிது. குழந்தை கொழுகொழுவென்று அழகாயிருந்தாற் போதும்" என்று ஒரு பெண் கூறினல் தாராளமாகப்பெற்றுக்கொள்ளட்டும்; தடுத்து நிறுத்த நாம் யார்?

ஆனல் ஒன்று; குழந்தை பெற வேண்டும் என்ற துடிப்பில், ஆத்திரத்தில், இருட்டில் எந்தச் சந்து பொந்துக்குள்ளாவது நுழைந்து எந்தத் தொழுநோயனுடனுவது சேர்ந்தால் குருட்டுக் குழந்தையோ நொண்டிக் குழந்தையோ பிறந்தாலும் பிறந்துவிடும். யார் கண்டது?

-ம. இலனியன் தங்கப்பா
பி. ஏ., பி. டி.



கண்ணதாசன் பதில் தருகிறார்

முத்துச்சோழன், தியாகராயர் புது வீதி, கோவை.

"'க'வுக்குப் பிறகு 'ங'வும், 'ச'வுக்குப் பிறகு 'ஞ'வும் எதனால் வந்தன?" என்று சிவ ஞானத்திடம் கேட்டீர்கள். அதற்கு இதுவரை எந்த ஞான மும் பதில் கூறவில்லை. இவ் வினாவை, தமிழ் கற்ற என் நண்பரொருவரிடம் கேட்டேன். அவர் ஒரு விடை கூறினார். உங்கள் பதில் என்ன?

வல்லினம்-மெல்லினம்-இடையினம்

க	ங	ய
ச	ஞ	ர
ட	ண	ல
த	ந	வ
ப	ம	ழ
ற	ன	ள

-இம்மூன்று இனங்கள், தமிழில் எழுத்துப் பிரிவுகள். ஆரிய மொழி இனங்களிலும், அவற்றிற்கு ஆட்பட்ட பிற திராவிட மொழிகளிலும், 'க' (Ka) வுக்கு "க" (Ga) உண்டு. "ச" (Sa) வுக்கு "ஜ" (Ja) உண்டு. "த" (Tha)வுக்கு "த" (Dha) உண்டு. "ப" (Pa)வுக்கு "ப" (Ba) உண்டு. தமிழிலோவெனில் ஒரே ஒலிதான் உண்டு. அதனால் இந்த வல்லின எழுத்துக்களுக்கே மெல்லிய ஓசை கொடுக்கின்றன, மெல்லின உயிர்மெய்கள். உதாரணமாக, "க்"குக்கு அடுத்த எழுத்தாக அதே இனத்துக் 'க' கரம் தான் வரும். வேறு எந்த இனத்து உயிர்மெய்யோ, மெய்யோ வரமுடியாது. **பாக்கு, நாக்கு, காக்கை** — இப்படித் தான் வரமுடியும் **'நாக்பூர்'** என்பது போல் "க"கர மெய்க்குப் பிறகு 'ப' கரம் வராது. அதே நேரத்தில், 'ங' கரமெய்யான 'ங்' ஙுக்குப் பிறகு, 'ங' கர உயிர்மெய்யும், 'க' கர உயிர் மெய்யும் வரும். அப்படி வருகிற 'க' கர உயிர்மெய், 'Ga' என்ற ஒலியோடு இயங்கும். **"தங்கம்-பொங்கும் - வெங்களம்"** போன்ற சொற்களில், "க" கரம் 'Ga' ஒலி பெறுவதைக் காண்கிறோம்.

இப்படியே வல்லின "ச"வுக்கு, "ஜ" ஒலி கொடுப்பது, அடுத்துள்ள "ஞ" கரத்தின் மெய்யாகும். **"பஞ்சு, நெஞ்சு, துஞ்சு, மிஞ்சு"** போன்ற சொற்களைக் காண்கிறோம். "ஞ" கர மெய்க்கு அடுத்த எழுத்தாக 'ஞ' கர உயிர்மெய்யோ (**'மஞ்ஞை'** போல்) 'ச' கர உயிர் மெய்யோ தான் வருகின்றன.

இப்படியே, வல்லின 'ட'காரத்துக்கு 'ண'கர மெய், 'Da' ஒலி கொடுக்கிறது.

வல்லின "த"கரத்துக்கு 'ந'கர மெய், Dha ஒலி கொடுக்கிறது.

வல்லின "ப"கரத்துக்கு 'ம'கர மெய், Ba ஒலி கொடுக்கிறது.

-வல்லினத்தின் ஒவ்வொரு எழுத்தும், தன் மெய்க்குப் பிறகு வரும் உயிர் மெய்யில் வல்லோசையையும், அடுத்த மெல்லின மெய்க்குப் பிறகு வரும் உயிர் மெய்யில் மெல்லோசையையும் பெறுகின்றன.

'க'வுக்குப் பிறகு 'ங' அமைந்தது, அதுதான் அதற்கு மெல்லோசை தருகிறது என்பதால். 'ச'வுக்குப் பிறகு 'ஞ', 'ட'வுக்குப் பிறகு 'ண', 'த'வுக்குப் பிறகு 'ந', 'ப,வுக்குப் பிறகு 'ம'-என அடுக்கியதற்கு இதுதான் காரணம்.

வல்லோசை	**மெல்லோசை**
தேக்கு	தேங்காய்
அச்சு	அஞ்சு
பட்டு	வண்டு
பத்து	பந்து
அப்பா	அம்பு

-அடுத்தடுத்து அமைந்த எழுத்துக்களின மெய்களில் முந்திய எழுத்துக்களுக்கு உறவு அமைகிறது.

-சரி; ஏன், வல்லினத்தில் 'ற'வையும், மெல்லினத்தில், 'ன'வையும் சேர்த்தார்கள்?

"ற" "ர" இரண்டு; 'ற'-இதுவல்லினம். 'ர'-இது இடையினம்.-இதில் மெல்லினத்தைக் காணோமல்லவா? இந்த மெல்லினம, 'ன'கர மெய்யின் பின்னால்வல்லின 'ற' வரும்போது வந்து விடுகிறது. **"கன்று, நின்று, தென்றல், மன்றம்"** முதலிய சொற்களைக் காண்க.

ஆனால் முழுக்க முழுக்க, இனத்தூய்மையும், துணைத்தூய்மையும், 'ன' கரத்துக்கும் 'ற' கரத்துக்கும் கிடையாது. அதனால், எழுத்து முறையிலேயே இவற்றைக் கடைசியில் தள்ளினார்கள். 'ங' கர மெய்யும், 'ஞ' கர மெய்யும் பிற மெல்லின மெய்களும், தம்மினத்து உயிர்மெய்களையும், தமக்கு முன்னிருக்கும் துணையினத்து உயிர்மெய்களையுமே மெல்லோசைகளில் சுவையாக்குகின்றன. 'ற' கரமும், 'ன' கரமும் அப்படியல்ல.

கற்றல், கற்பு, கற்கை, எனப் பல உயிர்மெய்களைப் பக்கம் வைக்கின்றது 'ற' கர மெய்.

அன்னம், அன்பு, தன்மை, பன்மை எனப் பல உயிர்மெய்களைப் பக்கம் வைக்கிறது 'ன' கரமெய். ஆனால், 'ன' கரமெய், 'ற' கரத்துக்கு மெல்லோசை கொடுப்பதால், 'ன' மெல்லினமாகவும், "ற" வல்லினமாகவும் நிற்கின்றன.

மீதியுள்ள **ய, ர, ல, வ, ழ, ள** ஆகியவற்றை இடையினமாக்கியதற்குக் காரணம், இந்த இனத்தில் சிலவற்றில், ஒரு மெய்க்குப் பிறகும், மற்றொரு மெய் வரும். ஒரு இடையினம், தன்னைத்தவிர பிறர் துணையை ஏற்காது; யாருக்கும் துணைபுரியாது. இப்படி அகந்தை கொண்ட எழுத்த, இடையினத்தில் 'வ' ஒன்றுதான். பதங்களில் தன் ஒலியை மட்டுமே இது தரும்.

செவ்வி

செல்வேன்

-போன்ற சொற்களைக் காண்க.

ஒரு மெய்க்குப் பிறகும் மற்றொரு மெய் ஏற்கும்இடையினங்களுக்கு உதாரணம்.

வாய்த்திறம்

வார்ப்படம்

மீதியுள்ள ல, ழ, ள இவற்றின் மெய்கள் மற்றொரு மெய் தொடரும்போது புணர்ச்சி விதிப்படி அடிபட்டுப் போய்விடுகின்றன. 'ல்', 'ள்' இவற்றுடன் அடுத்த மெய் வரவும் செய்யலாம்; புணர்ந்து, புது எழுத்தைத் தரவும் செய்யலாம் என்பது இலக்கண விதி.

(உ-ம்)பால்ப்பானை-பாற்பானை தோள்ப்பட்டை-தோட்பட்டை

ஆனால், 'ழ்'க்குப் பிறகு வரும் மெய்க்குப் புணர்ச்சி விதி இலக்கணத்தில் இல்லை. வழக்கில் உளது.

(உ-ம்)வீழ்த்து-வீட்டு (என எழுதப் பெறுகிறது)

-இப்படித் தனித் தன்மையும் துணைத் தூய்மையும் ஓசை மாற்ற உதவும் பண்பும் அற்ற எழுத்துக்களை 'இரண்டுங் கெட்டான்கள்' என்றே இடையினம் ஆக்கினார்கள்.

-இனப் பிரிவும், எழுத்தடுக்கும் இப்படித் தட்டிச் சலித்துச் செய்யப் பெற்றிருக்கின்றன, தமிழில். இன்னும், உயிர் எழுத்துக்களுக்குப் பிறகு வரும் உயிர்மெய்கள் பெறும் அழகை, பத்தி பத்தியாக எழுதலாம்-தனிக் கட்டுரை எழுதுகிறேன்.

★

இர சந்திரகாசன், சேலம்,

வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு (726)

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சு மவன்கற்ற நூல். (727)

இக்குறள்களில் வள்ளுவப் பேராசான் ஒரே கருத்தை இரு முறை விளக்கக் காரணம் என்ன? நயச்சிறப்புண்டாயின் நவில்க.

இரு குறட்பாக்களும் ஒரே உவமையைத் தொடர்ந்து கூறுகின்றன. வாள் வீரர்க்குரியது. நூல் அவையாடுபவர்க்குரியது. முதல் குறட்பா அவை அஞ்சுபவருக்கு நூல் பயனில்லை என்று கூறுகிறது. காரணம் நுண்ணவை என்ற அடைமொழியில் வற்புறுத்தப்படுகிறது. அவையில் மதிப்புப் பெறுபவர் நூலைக் கொண்டு வந்தாலோ அதை மேலீடாக அறிந்திருந்தாலோ ஒரு சிறிதும் பயனில்லை என்பதை இக்குறட்பா வலியுறுத்துகிறது. ஏனெனில் அவையிலுள்ளோர் நூல்களை ஐயம் திரிபறக் கற்று ஆராய்ந்த நுண்ணறிவுடையராய் இருப்பர். இந்த நுண்ணாராய்ச்சி அறிவை, சிந்தனையற்ற நூலறிவுகூட எதிர்த்து மதிப்புப் பெறமுடியாது.

இரண்டாவது குறட்பா உவமையின் பொருத்தத்தை முற்றிலும் மாற்றிவிடுகிறது. அவை அஞ்சும் இயல்புடையவன் அதாவது தற்சிந்தனையும் நுண்ணாராய்ச்சியும் இல்லாதவனுக்கு நூல் பயனில்லை என்பது மட்டுமல்ல, ஆபத்தானதுகூட என்று உவமையே விளக்குகிறது. போர்க்களத்தில் வெறுங் கையோடு செல்லும் பேடியைவிட வாள்கொண்டு செல்லும்பேடியே ஆரிடருக்கு ஆளாவான். ஆராய்ச்சி இல்லாமல் நூல் அல்லது நூலறிவு மட்டும் கொண்டு செல்பவன் நிலை இது.

★

சிப்பி-கலாபன், தாம்பரம்.

தமிழ்ச் சொற்களுடன் கலந்துள்ள வடமொழிச் சொற்களைப் பிரித்துணரும் வகையாது?

ஆசிரியர் மறைமலையடிகள், சொல்லின்செல்வர் ஆர். பி. சேதுப்பிள்ளை, நாவலர் பாரதியார் போன்ற தமிழ் உரைநடை ஆன்றோர்களின் வழக்குகளே இவ்வகையில் மாணவர்க்கு நல்ல வழிகாட்டியாகும். கம்பர் காலம் வரை உள்ள தமிழ் இலக்கியம் பெரும்பாலும், அதற்குப்பிற்பட்ட ஆன்ற புலவர் இலக்கியம் பெரிதளவும் இதே வகை வழிகாட்டிகளாய் அமையக்கூடும்.

தென்தமிழ்ப் பரதகுலத்தவர் எக்காலத்திலேனும் பாண்டிய நாடாண்டதாக வரலாறு உள்ளதா?

பாண்டியரின் பெயர்களில் பரதவர் என்பதும் ஒன்று. பத்துப் பாட்டிலும் சங்க இலக்கியங்களிலும் இது பெரு வழக்கு. ஆகவே பாண்டிய நாட்டை ஆண்டவர்களே பரதவர்கள் தாம். பரத குலத்தவர் என்னும் சொல்லின் பழம் பொருள் பாண்டிய மரபினர் என்பதுதான். வேறு எவ்வகைக் குலமும் சாதிகளும் தென்னாட்டில் 400 ஆண்டுகட்கு முன் கிடையாது.

இற்றை நாள் தமிழ்ப்புலமை மிகு மகளிர் யாவர்?

இன்றை நாள் தமிழ்ப் புலமை மிகு மகளிர் புலமை மிக்க ஆடவரைப்போலவே "வானத்து மீனில் பல"ராதல் கூடும். காலஞ் சென்ற ஈ. டி. ராஜேசுவரி அம்மையார், முதுபெரும் பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையார், பேராசிரியை ஆர். இந்திரா, பெருஞ் சொற்பெண்டு திருமதி சௌந்தரம் கைலாசம் ஆகியோர் குறிப்பிடத்தக்க சிலர். ★

திருத்தம்

கடந்த இதழ் **"சிரிப்புந்தான் வருகுதையா"** பகுதிப் பாடலில் நான்காம் வரியில் உள்ள **"சொல்வேன்"** என்றிருப்பதை **"சொல்வோம்!"** என்றும், 44-ம் வரியில் **"தமிழ்நாட்டீர்"** என்றிருப்பதை **"தமிழ நாட்டீர்"** என்றும் 54-ம் வரியில் **"தமிழல் லால்"** என்றிருப்பதை **"தமிழல் லாமல்"** என்றும் திருத்தி வாசித்துக் கொள்க. "யாவலர்" என்ற முதற்பக்கப் பாடலில் 2-ம் வரியில் **"தமிழ்க்குலத்தின்"** என்றிருப்பதை **"தமிழ்க்குலத்துத்"** என்று மாற்றிக்கொள்க.

—ஆ-ர்.

— 6-ம் பக்கத் தொடர்ச்சி —

எழில்காட்டி ஏமாற்றும் கணிகை போன்ற
இவர்நாட்டும் நட்புரிமைக்கு அஞ்ச வேண்டும்.
அழிவொன்றே இவர்நோக்கம். அன்பும் நட்பும்
அதற்குரிய கருவிகளே அறிய வேண்டும்
தொழுகின்ற கையுள்ளும் படையொ டுங்கும்
துளிர்க்கும்கண் ணீரினிலும் பகைமை சொட்டும்
முழுவுலகும் அழுதிடவே அண்ணல் காந்தி
முடிசாய்த்த கோட்சேயே இதற்குச் சான்று.

நட்புக்குச் சாதிமதம் கட்சி யில்லை.
நல்லன்பும் பண்புந்தான் பால மாகும்.
பெட்புடையார் நட்பதனைப் பெற்றோ மானல்
பேருலகும் நமதென்னும் பெருமை தோன்றும்.
கட்சியிலும் கருத்தினிலும் மாறு பட்டும்
கண்ணிரண்டாய் வாழ்பவரைக் காணு கின்றோம்
உட்கருத்து புரிகிறதா? ஒத்த பண்பும்
உணர்ச்சிகளும் பின்னுவதால் நட்பு வாழும்.

பார்த்தவுடன் "நீஎன்ன வர்ணம்" என்று
பகர்கின்ற காலம்மலை ஏற லாச்சு
பார்த்தவுடன் கேட்டாலும் என்ன சொல்வான்?
"பார்நண்பா! 'நான்கறுப்பு வர்ணம்'" என்பான்.
கூர்த்தமதி கெட்டவனுய் இருந்தால், மேலும்,
"கூறிடநான் சொன்னதுந்தன் சாதி" என்பான்.
ஆர்த்தெழுவான் "அய்யய்யோ அதுவா கேட்டீர்"?
"ஐயாநான் தமிழ்ச்சாதி" என்பான் அன்பாய்.

சாதியினுல் நட்புறவு கொள்ள, இந்தத்
தலைமுறையில் நினையாதீர்! வாழ மாட்டோம்.
நீதிக்கே ஒருநூலாயக் குறளைப் பெற்ற
நெறியினரா பேசுவது சாதிக் கேண்மை?
ஆதிநிலைத் தமிழ்வாழ்வு மலர வேண்டின்
அன்புளத்தால் இனவுணர்வால் நட்பு வேண்டும்!
மேதினியே அப்போது நம்மை நோக்கும்;
வீழ்ச்சியுற்ற திருநாடு நமதென் ருகும்.

துயரமெனும் பெருஞ்சுமையை இறக்கி வைக்கத்
தூயமன நண்பர்களே தக்க வீடு
மயங்கிவிழும் காதலரும் மனந்தி றந்து
வழியறிய நண்பர்களே தக்க ஏடு
கயமைவழி செல்பவரை உரிமை யோடு
கடிந்துரைக்க நண்பர்களே தக்க சூடு
வியத்தகுஇந் நட்புயர்வை உணர்ந்த மக்கள்
விளங்குவதே சிறப்பமையத் தக்க நாடு.

கொள்கின்ற நட்போடு கூடா நட்பும்
குறள்மொழியால் வாழ்வியலால் கூற லானேன்.
எள்ளளவ உணர்ந்தாலும் ஏற்றம் காண்பீர்!
இணையறியாக் குறளமுதைப் பெற்ற நாட்டீர்!
உள்ளத்தால் எனைவிரும்பிக் கவிதை பாட
உவந்தழைத்த குறட்கழக நண்பர் கட்கும்
வெள்ளம்போல் திரண்டிருந்து சுவைத்த உங்கள்
மேவுதமிழ்ப் பற்றுக்கும் வணக்கம்! நன்றி!

★

"கண்ணதாசன் கவிதைகள்" பற்றி

சுதேசமித்திரனில் திரு. ந. பிச்சமூர்த்தி!

"சினிமாக் கலைஞராகவும். தி. மு. க. தலைவராகவும், கவிஞராகவும் விளங்கும் கண்ணதாசனைத் தமிழ்நாடு நன்கறியும். 1944 முதல் 1959 வரை அவர் எழுதிய பாடல்கள் முதல் தொகுப்பாக இப்பொழுது வெளியிடப்பட்டிருக்கின்றன.

இத்தொகுப்பில் இரண்டு சிறு காவியங்கள் இடம் பெற்றிருக்கின்றன. பழம்பாடல் புதுக் கவிதை என்னும் பகுதியில் நளவெண்பா, முத்தொள்ளாயிரம், நற்றிணை ஆகிய பழம் பாடல்கள் இரண்டொன்றை எடுத்துக்கொண்டு விரித்து, புதுக் கவிதையாக்கித் தந்திருக்கிறார் கவிஞர். புகையிலை பிரித்தால் போச்சென்பார்கள். இப்புதுக் கவிதைகளைப் படிக்கும்பொழுது அந்த உணர்ச்சிதான் ஏற்படுகிறது.

வாழ்க்கையும் வனப்பும் என்ற பகுதியில் காதல் சுவை கையாளப்பட்டிருக்கிறது. பாடல்களின் கவிதைச் சிறப்பைவிட கருத்துக்களே முதலில் மனத்தைத் தாக்குகின்றன. ஆண் பெண் உறவு பற்றி எழுந்துள்ள நவீன எண்ணங்களைப் பாடல்கள் பிரதிபலிக்கின்றன. 'அழகி' என்னும் பாடலில் கவிஞர் கூறுகிறார்: 'கலகமூட்டிடும் பெண்மையின் பேரெழில் கண்கள் கால்கள் கைகளில்லையாம். நிறைவுறுதவள் நிரந்தர அழகியே!' நிறைவுறுதவள் நிரந்தர அழகியாயிருப்பாள் என்பதைவிட நிரந்தர நரம்பு நோயாளியாக இருக்கிறுள் என்பதுதான் அனுபவத்திற்கு ஒத்தது. தாய்மையைவிடச் சிறந்த அழகொன்றுண்டு என்பதை இயற்கை நம்பவில்லை. உயிரியக்கத்தின் உள்விசையே இதற்குப் போதுமான மறுப்பு.

'பிரிவும் பரிவும்' என்ற தலைப்பின்கீழ் இரங்கற் பாக்களைக் காண்கிறோம். என். எஸ். கிருஷ்ணன் மறைவு பற்றியும், டி என். ராஜரத்தினத்தின் மறைவு பற்றியும் கவிஞர் புனைந்துள்ள பாடல்கள் வேதனையின் உச்சத்தை உணர்த்துகின்றன.

'குறியும் கொள்கையும்' என்ற பகுதியில் கவிஞரின் கொள்கைகள் வேகத்துடன் பிரசாரம் செய்யப்பட்டிருக்கின்றன. ஒன்றே காதல் என்ற தமிழர் நெறியை இப்பகுதியில் கவிதைத் தலைவி எதிர்பார்த்து ஏமாந்து விலகிவிட்டாள் என்று தோன்றுகிறது.

'இசையும் பாட்டும்' என்ற பகுதியில் கவிஞரின் சினிமாப் பாடல்கள் தரப்பட்டிருக்கின்றன. பல்சுவைப் பாடல்கள் என்றதொரு பகுதியில் தரப்பட்டிருக்கிறது. கவிஞரின் இரு சிறு காவியங்களான 'மாங்கனி'யும் 'ஆட்டனத்தி-ஆதிமந்தி'யும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன இவ்விரண்டினுள் பிந்தியது வெகு சிறப்பாக அமைந்துள்ளது.

தொகுப்பெங்கிலும் கவிஞரின் செந்தமிழ்க் கவிதைப் பழக்கம் ஒளி வீசுகிறது. ஆசிரியருடைய கவிதாநடை ஏறக்குறைய வழக்கிலுள்ள சொற்களால் அமைந்திருப்பதால், இயற்கை அமைதிபெற்று வலிமையுடன் செல்கிறது. அத்துடன் கற்பனை நயமும் ஒலிஉணர்வும் இணையும்பொழுது இனிய கவிதை கிடைக்கிறது. கவிஞர் லாகவமாக யாப்பு வகைகளைக் கையாண்டிருக்கிறார். ரசிகர்களின் ஆவலுக்குரிய நல்விருந்து.

—சுதேசமித்திரன் 1-8-'59.

"20-6-'59-ம் நாள் 'தென்றல்' இதழில் 'அண்ணு பிறந்த நாள் மலர் செப்டம்பரில் வரும்!' என்றெழுதினீர்கள்! எப்போது வருகிறது? என்ன ஏற்பாடுகள் நடக்கின்றன?" என்று கேட்டெழுதுகின்றனர் தோழர்கள் பலர். எல்லோருக்கும் ஓரே பதில்!

ஏற்பாடுகள் விரைந்து நடக்கின்றன!

எழுத்தோவியங்கள் பல இடம் பெறுகின்றன!

எல்லாச் சிறப்புகளும் மிளிர்கின்றன!

இவ்வளவு பெருமையும்
தாங்கி வரும்

அண்ணு மலர்

இத்தனைக்கும் விலை எட்டணுதான்!

உங்கள் இல்லங்களில் திகழப்போகும் நாள்

செப்டம்பர் 15-ப் நாள்!

பொறுப்பாளர்,
"தென்றல்".

திருமண அழைப்பு!

அன்புடையீர்,

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 1990, ஆவணித் திங்கள், முதல் நாள் (17-8-'59) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு எங்கள் மகன் திருநிறைச்செல்வன் ம. சந்திரசேகரனுக்கும், திரு. சி. ஆர். இராமகிருட்டிணன் மகள் திருநிறைச் செல்வி ரா. கற்பகவல்லிக்கும், சென்னைப் புரசைப் பாக்கம், மூக்காத்தாள் தெரு, 28-ம் எண்ணுள்ள இல்லத்தில், கண்ணதாசன் அவாகள் தலைமையில் நடைபெறும் திருமண விழாவிற்குத் தாங்கள் குடும்பத்துடன் வந்திருத்து மணமக்களை வாழ்த்துமாறு வேண்டுகிறோம்.

மணமக்களை வாழ்த்தி

அறிஞர் அண்ணு, சொல்லின்செல்வர் சம்பத் எம். பி.
ஆகியோர் உரையாற்றுவர்.

இங்ஙனம்,
கு. மதுரை
ம. தனக்கோட்டி

சென்னை
15—8—'59

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு